# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இலவச வெளியீடு

மலர் : 4 இதழ் : 4 ஏப்ரல் 2025




## சித்திரை சிறப்பிதழ்

# உங்கள் கனவு இல்லம்
# இனி ஒரு கனவு இல்லை.

## இன்றே சேமிக்க துவங்குவோம்!!!




**1 இலட்சம் சீட்டு**
முதல்
**1 கோடி சீட்டு**
வரை....

ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட்

79th YEAR

**நம்பிக்கை, நாணயம், நேர்மை**
நிலையான தன்மையுடன், வாடிக்கையாளர் சேவையில்...

எங்களை, ஊக்குவிக்கும் வாடிக்கையாளர்கள்
**அனைவருக்கும் நன்றி**


SREE VISALAM CHIT FUND LTD.
REGD. TIRUNELVELI


பதிவு அலுவலகம்:
திருநெல்வேலி - 627006. போன்: 0462-2333474

நிர்வாக அலுவலகம்:
பள்ளத்தூர் - 630107. போன்: 04565 283477

மத்திய அலுவலகம்:
219, அண்ணா சாலை, சென்னை - 600002.
போன்: 044 28525344, 044 28523386

https://www.sreevisalam.com/
போன்: 86670 03356




GET IT ON Google Play

# வணக்கம் வாசகர்களே...

இப்போது உங்களின் மேம்பட்ட வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

**Naam Nagarathar Mobile App**

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...




# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

ஏப்ரல் 2025

மலர் : 4 இதழ் : 4

இலவச வெளியீடு

**பதிப்பாசிரியர்**

இராம.சொக்கலிங்கம்

நற்சாந்துபட்டி

---

**இதழாசிரியர்**

உமையாள்

---

**இதழ் வடிவமைப்பு**

ச. தஸ்லிம்

---

**புத்தக ஆக்கம்**

சேனா டிஜிட்டல்

மின்நூல் வெளியீட்டாளர்கள்

172 – D மேட்டுப்பாளையம் சாலை

நீலகிரி பெர்டிலைசர் காம்பவுண்ட்,

கோயம்புத்தூர் – 641043.

---

**விளம்பரம் தொடர்புக்கு**

97917 76534

---


கட்டுரைகள் மற்றும் இதர படைப்புகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

PM
SWITCH TO THE FUTURE

# PALLATHUR MOTORS LLP

## PETROL RIDER LIFE

SALARY வந்தா உடனே ,
பெட்ரோல் - க்கு
ஒரு 2000 to 4000 தனியா
வைக்கணும் !




## ELECTRIC RIDER LIFE

SALARY வந்தா உடனே,
Extra 2000 to 4000
Saving - ல கோல்டு
வாங்கலாமா இல்ல,
சீட்டு போடலாமானு
யோசிக்கலாம்...!



# ELECTRIFY YOUR JOURNEY NOW

Go far and wide with just
a single charge

LECTRIX



Book Your TEST DR!VE Now!!

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் +91 80157 73735

பள்ளத்தூர் மோட்டர்ஸ், எண் 151, வி.ஓ.சி வீதி, காரைக்குடி - 630 001

# வளவுக்குள்...

அன்பு வாசகர்களுக்கு...

வணக்கம்....!

நகரத்தார்கள் வாசிப்பின் ஓர் அங்கமாக வலம் வரும் நம் மின்னிதழ் வாயிலாக வாசக உறவுகளாகிய உங்களைச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி.

பசுமை சூழ் இயற்கையுடன், பூக்கள் பூத்துக் குலுங்க, குயிலின் இனிய கானத்துடன் சித்திரை வருடப்பிறப்பைக் கொண்டாடத் தயாராக இருக்கும் இந்த வேளையில் எல்லோரும் சித்திரைப் பெண்ணை வரவேற்க மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பீர்கள். இந்த நல்ல தருணத்தில், நல்ல விடயங்களை முன்னெடுத்து நடைமுறைப்படுத்த உறுதி பூணுவோம்.

மற்றொரு புறம் கோடைகாலம் தொடங்கிவிட்டது.

வழக்கம் போல இந்த ஆண்டும் உங்கள் குழந்தைகளுக்கு ஆண்டு இறுதித் தேர்வுகள் முடிந்ததும், கோடை விடுமுறை விடுவார்கள்.

இந்த விடுமுறையை மனதில்வைத்து, சுற்றுலா, உறவுகளைப் பார்க்கச் செல்வது, குலதெய்வ தரிசனம் என்று எத்தனை எத்தனையோ திட்டங்களை வைத்திருப்பீர்கள். அதோடு, அவுட்டோர் கேம் அல்லது இண்டோர் கேம் ஏதாவது கற்றுக்கொள்ள பிள்ளைகளை அனுப்புவது, டிராயிங், மியூசிக் என்று புதிதாக எதையாவது கற்றுக்கொள்ளச் சொல்வது. இப்படிப் பலவற்றை யோசித்தும் வைத்திருப்பீர்கள்.

இவற்றை எல்லாம் கற்றுக்கொள்வதும், தெரிந்துகொள்வதும் எந்த அளவுக்கு உங்கள் குழந்தையின் எதிர்காலத்துக்கு உதவும் என்று நம்புகிறீர்களோ அதே அளவுக்கு உதவக் கூடிய வேறொரு விஷயமும் இருக்கிறது.

அது நம்முடைய நகரத்தார் பாரம்பரியத்தை, பக்தியை, கலாசாரத்தை அவர்கள் தெரிந்துகொள்வது. இதற்கு எளிய வழி அவர்களை நம் சொந்த ஊர்களுக்கு விடுமுறையில் அழைத்து செல்வது. நம் வீட்டு ஆயா, அப்பத்தாக்கள், ஐயாக்கள் மூலம் சின்னச் சின்ன கதைகள், நம் வரலாற்றை எல்லாம் அவர்களுக்குச் சொல்லித் தருவது அல்லது அவர்களை பார்த்து, கேட்டுத் தெரிந்து கொள்ளச் சொல்வது தான்.

இவையெல்லாம் அவர்கள் எதிர்காலத்தில் வளமையாக வாழ் மட்டுமல்ல, நல்லவர்களாக, நற்பண்பு உள்ளவர்களாக, நன்னெறியில் வாழ்பவர்களாகத் திகழ உதவும். பொருளையும் பகட்டையும் விடவும் நமது பாரம்பரியம் மிகவும் முக்கியம். அதை உணர்ந்தாலே உங்கள் குழந்தைகளின் எதிர்காலம் சீராகும் சிறக்கும்.

சித்திரைச் சிறப்பிதழாக மலரும் இம்மாத இதழை தங்கள் அனைவரது வாசிப்பை கவரும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பல ஆக்கங்களுடன் வெளியிடுகின்றோம்.

சித்திரையில் பிறக்கப் போகும் " விசுவாவசு " வருடம் நம் வாழ்வில் சுபீட்சத்தையும், மகிழ்வையும் கொண்டு வந்து சிறப்பிக்க வேண்டும் என்று நாம் நகரத்தார் மின்னிதழ் சார்பாக அனைவரையும் வாழ்த்தி மகிழ்கிறோம்.

" அனைவருக்கும் இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் "

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் நகரத்தார் குலம் நாளும் செழிக்கட்டும்..!

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்
t.me/naamnagarathar
Join Telegram



அன்புடன்

இராம.சொக்கலிங்கம்
பதிப்பாசிரியர்

## இந்த இதழில்....


**நமது சிந்தனைக்கு**

- நல்லன எல்லாம் தரும் நயமிகு தமிழ்ப்புத்தாண்டு!
  –கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 10

**மொழி**

- வாங்க பேசலாம் ..! – – பேரா. கு. அன்புமெய்யப்பன் . . . . . . . . . . . . . . . . . . . . 21

**சிறுவர் பக்கம்**

- மழலை மழைத்துளிகள்..!!! கல்லல் மீ.மணிகண்டன் Texas, USA . . . . . . . . . . 27

**ஆன்மீகம்**

- மீனாட்சி திருக்கல்யாணம் – மெ.சண்முகம், காரைக்குடி . . . . . . . . . . . . . . . . . 29

**கவிச்சோலை**

- தமிழின் அருமை – அரு. சிவகாமி இராமனாதன் ஒக்கூர் . . . . . . . . . . . . . . . . 33
- சிறப்பு மிகு சித்திரை – கவிஞர் எம்.சோலை காரைக்குடி . . . . . . . . . . . . . . . . 50

**வாழ்வியல்**

- பெண் கதவு... ஆண் பூட்டு..! – சேவு.முத்துக்குமார் காரைக்குடி . . . . . . . . . . . . 34

**பக்தித் தொடர்**

- சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாள் – ச.முத்துலெட்சுமி திருநெல்வேலி . . . . . . . . 40

**உடல் நலம்**

- கோடை காலத்தில் குழந்தைகளின் உடல்நலனை பாதுகாப்பதற்கான டிப்ஸ் . . 51

**பண்பாடு**

- செட்டிநாட்டு சித்திரகுப்தநாயனார் பூசை
  –இராம.நா .இராமநாதன் – ஆ.தெக்கூர். . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 56

**சமையல்**

- சர்க்கரை வள்ளி கிழங்கு அல்வா . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 60

**நிதி மேலாண்மை**

- பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்... . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 63

**ஜோதிடம்**

- குருபெயர்ச்சி– 2025 பலன்கள் | எந்த ராசிக்கு யோகம் ? –ஜோதிடர் எல்லி . . . 75

உ

# திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## வளத்திஸ்ரீ சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## ஸ்ரீ முத்துமீனா சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

VALATHI 2005

பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை

**எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு**

**ரூ. 1,00,000/- முதல்**

**ரூ. 30,00,000/- வரை**

அதிகபட்ச உச்சவரம்பு **30%** முதல் **40%**வரை

பல்லாண்டு கால நம்பிக்கை ! நாணயம் ! நேர்மையான அணுகுமுறை!

**இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.**

0431-2760064
0431-7968005

துவக்கம் 2005

94439 86143

**TRICHY SHREE VALATHI CHITFUNDS (P) LTD.**

**VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,**

**SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,**

"ஸ்ரீ வளத்தி"
C - 145 - D, முதல் தளம், N.V.V. கேஸ்டில்
தில்லைநகர் 6–வது கிராஸ் – கிழக்கு
திருச்சிராப்பள்ளி - 620 018.
Cell : 94439 86143

"ஸ்ரீ வளத்தி"
9/1, (4/1),அருணோதயா அபார்ட்மெண்ட்
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093
Cell : 91235 71029

எண். 1, முதல் தளம், பழைய சொக்கநாதர் கோவில் தெரு,
குமார் மெடிக்கல்ஸ் மாடியில்
மதுரை - 625 001. Cell : 89034 90064.

tvcfpl@gmail.com www.valathichitfunds.com

★ வாய்மையே வெல்லும் ★

# நல்லன எல்லாம் தரும்
# நயமிகு தமிழ்ப்புத்தாண்டு!



– கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.

உலகமெங்கும் வாழ்கின்ற தமிழர்கள், அதிலும் குறிப்பாக நகரத்தார்கள் தங்களது பண்பாடு, கலாச்சாரம், தனி அடையாளங்களை தொலைத்து விடாமல், தங்களது முன்னோர்கள் வழிகாட்டிய படி முக்கியமான பண்டிகைகளை மிகச்சிறப்பாகக் கொண்டாடி வருகிறார்கள்.

அப்படிக்கொண்டாடும் விழாக்களில் முக்கியமானது, தமிழ்ப் புத்தாண்டு பிறப்பும், பொங்கல் விழாவும்,தைப்பூசத் திருவிழாவும், பிள்ளையார் நோன்பும் ஆகும். நகரத்தார்கள் தமிழ்ப்புத்தாண்டு பிறப்பு என்பதை மிக்க மகிழ்ச்சியோடு கொண்டாடுவார்கள். சித்திரைப்பிறப்பையே தங்களின் முத்திரையைப் பதிப்பதற்குக் கிடைத்த ஒரு நல்ல வாய்ப்பாகக் கருதுவார்கள்.



உலகமெங்கும் வணிகம் செய்வோர் புதுக்கணக்கை ஏப்ரல் மாதம் ஒன்றாம் தேதி தொடங்குவார்கள். ஆனால் நகரத்தார்கள் வணிகம் செய்யத் தொடங்கிய காலம் தொட்டு, இன்று வரை புதுக்கணக்கை, சித்திரை முதல் நாள், தமிழ்ப்புத்தாண்டு பிறப்பு அன்றுதான் எழுதுவார்கள்.



புதுக்கணக்கை எழுத, வணிகத்தைச் சிறப்பாக செய்துவரும் வயது முதிர்ந்த ,அனுபவமிக்க செட்டியார் ஒருவரை அழைத்து வந்து, முருகனுக்குப் பூசைவைத்து ,முருகனுக்கும், குலதெய்வத்திற்கும் முதலில் பங்கு வைத்து, அதற்கு ஆதாய வரவும் வைத்து, வந்திருக்கும் செட்டியாரின் கையாலே கணக்கு எழுத வைத்து, அந்த ஏட்டைப் பணிவோடு வாங்கிக் கொண்டு, அவரிடம் ஆசிபெற்று, தங்களது வணிகக் கணக்கை தமிழ்ப் புத்தாண்டு நாளில் தொடங்கும் பழக்கத்தை பல்லாண்டுகளாகப் பின்பற்றி வருவோர் நகரத்தார்கள்.

மார்வாரிகள் என்னும் வடநாட்டைச்சேர்ந்தவர்கள் தங்களது புதுக்கணக்கை, தீபாவளிப் பண்டிகையின் போது வரும் அமாவாசை நன்னாளில் லட்சுமி பூசை செய்து புதுக்கணக்கைத் தொடங்குவார்கள். இப்படி இந்தியாவில் வாழ்கின்ற ஒவ்வொரு இனத்தினரும் தங்களது முன்னோர்கள் கடைபிடித்த வழியில் தான் இன்றும் வணிகத்தில் பயணிக்கிறார்கள்.

மற்ற புத்தாண்டுகளுக்கு இல்லாத சிறப்பு தமிழ்ப் புத்தாண்டுக்கு என்ன தனிச்சிறப்பு ? என்று கேட்போரும் இங்கு உண்டு.



மற்ற சூரியனை அடிப்படையாக வைத்து தமிழ்ப் புத்தாண்டை கொண்டாடி வருகின்றனர் தமிழர்கள். ஒரு தமிழ் ஆண்டில் மொத்தம் 12 மாதங்கள், சித்திரைத்திங்களே தமிழ் நாட்காட்டியின் முதல் மாதமாக உள்ளது. தமிழ் ஆண்டின் கால அளவு எப்பொழுதும் சீரானதாகவே உள்ளது. அறிவியல் ரீதியாக சூரியன் பூமியைச் சுற்றி வர 365 நாட்கள், 6 மணி நேரம், 11 நிமிடம், 48 நொடிகள் ஆகிறது என்பார்கள். இதை வைத்துத்தான் தமிழ் ஆண்டின் கால அளவும் பின்பற்றப்படுகிறது. சூரியன் மேஷ ராசியில் நுழைவதை தமிழ் ஆண்டின் தொடக்க ஆண்டு என்றும், மீன ராசியிலிருந்து வெளிவருவதை,தமிழ் ஆண்டின் இறுதி ஆண்டு என வைத்து தமிழ் புத்தாண்டு கணக்கிடப் படுகிறது என்கிறார்கள்.

இதைவைத்து கணக்கிடும் பொழுது பெரும்பாலும் தமிழ் ஆண்டுப் பிறப்பு ஏப்ரல் மாதம் 13, 14, 15 ஆகிய தேதிகளில் தான் வருகிறது.

இதைவைத்து தமிழகத்தில் 9ஆம் நூற்றாண்டு முதல் 13ஆம் நூற்றாண்டு வரை நடைபெற்ற, சோழ மன்னர்களின் ஆட்சிக் காலத்திலேயே சித்திரை முதல் நாள் தமிழர்களின் புத்தாண்டாக கொண்டாடும் வழக்கம் ஏற்பட்டதாகவும், "தமிழ் நாட்காட்டி" உருவாக்கப் பட்டதாகவும் வரலாற்றுச் சான்றுகள் சொல்கின்றன தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய "நச்சினார்க்கினியர்" ஆவணியை,தமிழ் ஆண்டின் முதல் மாதம் என்று குறிப்பிடுகிறார், சித்திரை மாதம் தான் தமிழ்ப் புத்தாண்டின் முதல் மாதம் என்பதை நெடுநல்வாடை, பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த புட்பவிதி போன்ற நூல்கள் எடுத்துக்கூறுகின்றன. "மலைபடு கடாம் என்ற நூலில் "தலைநாள் பூத்த பொன் இணர் வேங்கை" என்றும், பழமொழி நானூறு "கணிவேங்கை நன்னாளே நாடி மலர்தலால்" என்றும் பாடுவதால் சித்திரை மாதமே தமிழ் புத்தாண்டின் முதல் மாதமாகக் கருதப்படுகிறது. சிலப்பதிகார காலத்திலிருந்து இன்று வரை தமிழர் அனைவரும் சித்திரைத் திருநாளை தமிழ்ப் புத்தாண்டுப் பிறப்பாக, ஏற்று கொண்டாடி மகிழ்கிறார்கள்.

இந்த தமிழ்ப்புத்தாண்டை இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் தமிழர்கள் வாழும் உலகத்தின் பல பகுதிகளிலும் கொண்டாடுகிறார்கள்.



புத்தாண்டு பிறக்கும் நாள் அன்று வீடுகளில் தயாரிக்கும் உணவில் அறுசுவையும் இருக்கும். இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கசப்பு கார்ப்பு என்கின்ற அறுசுவையும் கண்டிப்பாக இருக்கும். "வேப்பம்பூப்பச்சடி", "வேப்பம்பூப்பொரியல்", "வேப்பம்பூரசம்", மாங்காய்ப்பச்சடி", என்பவை ஒவ்வொரு குடும்பத்திலும் அன்றைய பகல்உணவில் இடம் பெறும். இதன் பின்னனி என்னவென்றால் நமது வாழ்வில் இனிப்பு, கசப்பு என இரண்டும் கலந்து இருக்கும் என்பதை உணர்த்துவது ஆகும். மேலும் பாயசம்,பருப்பு வடை, அப்பளம், அவியல் ஆகியவையும் இடம் பெறும். கோடைக் காலம் என்பதால் பானகமும், நீர் மோரும் தயாரிப்பார்கள்.

தமிழ்ப்புத்தாண்டு அன்று உணவில் நிச்சயம் இடம் பெற வேண்டும்,"மாங்காய்ப் பச்சடி"என்று முன்னோர்கள் சொன்னது எதற்காகத் தெரியுமா? சிறுவர்கள் மாங்காய்ப்பச்சடி, "வேப்பம்பூபச்சடி" ஆகியவற்றைப் பார்த்து முகம் சுளிப்பார்கள். அதற்கான காரணத்தை நாம் அவர்களுக்குச் சொல்ல வேண்டும். எதற்காக இந்த நாளில் மாங்காய்ப்பச்சடி கண்டிப்பாக செய்யப் படுகிறது? என்பதை நாமும் தெரிந்து உணர்ந்து கொள்ள வேண்டும்.

புதிய ஆண்டைத் தொடங்கும் நேரத்திலும் வாழ்க்கையின் "அடிப்படைத்தத்துவத்தை" உணவில் இருந்தே தொடங்கியுள்ளனர் நமது பண்டையத் தமிழர்கள். "மாங்காய்ப்பச்சடி" என்பது புளிப்பு, இனிப்பு, காரம் போன்ற பல சுவைகள் கலந்த உணவாகும்.



புத்தாண்டு மனித வாழ்க்கையும் இது போல பலவிதமான உணர்வுகள் கொண்டதுதான். உணவில் அறுசுவை எப்படி முக்கியமோ, அது போல வாழ்க்கையில் அனைத்து விதமான உணர்வுகளும் முக்கியம் மட்டுமல்ல அது காலத்தின் தேவையாகும். வாழ்க்கையில் எத்தகைய உணர்வுகள் வந்தாலும் அவற்றைச் சமமாகக்கையாண்டு வாழ்க்கையை சமநிலையுடன் நடத்திச் செல்ல வேண்டும் என்பதை உணர்த்துவதற்காகத் தான் தமிழ்ப் புத்தாண்டு நாளில் "மாங்காய்ப்பச்சடி" கண்டிப்பாக சமைக்கப்படுகிறது. அதேபோல் வாழ்க்கைக்கும் சரி, உடல் நலத்திற்கும் சரி சிறிதளவு "கசப்புச்சுவை" என்பது அவசியம். அதனால் தான் இந்த நாளில் வேப்பம்பூவைக் கொண்டு பொரியல் அல்லது ரசம் செய்து சாப்பிடும் பழக்கமும் ஏற்பட்டது.

ஆங்கிலப் புத்தாண்டை எல்லோரும் இரவு நேரத்தில் ஆட்டம் பாட்டம் போட்டுத்தான் கொண்டாடுவார்கள், அதிலும் குறிப்பாக இளைஞர்கள், இளம் பெண்கள் தான் ஆர்வத்தோடு கொண்டாடுவார்கள், ஆனால் தமிழ்ப் புத்தாண்டை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் கொண்டாடி மகிழ்வார்கள்.

தமிழ் புத்தாண்டு அன்று தொழில் தொடங்கினால் தொழிலில் அபார வளர்ச்சி கிடைக்கும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை தமிழர்களிடம் உள்ளது. இந்நன்னாளில் கல்விகற்பவர்கள், விவசாயிகள், வேலைத் தொழிலாளிகள்,புதிய முயற்சிகளைத் தொடங்கினால் அதில் நல்ல வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு உண்டு. இந்தக் காலத்தில் தான் விவசாயிகள் பயிர் செய்ய ஆரம்பிப்பார்கள். நெல் விதைப்பில் சிறுபோகம் ஆரம்பமாகும். இது போன்ற பல சிறப்புகளைப் பெற்றது நம்முடைய சித்திரைப் பிறப்பாகும்.



தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் அதிகாலை யில் எழுந்ததும் "கனி காணுதல்" என்பது முக்கியச்சடங்காக செய்யப்படுகிறது.சிலர் இந்த நாளில் சர்க்கரைப் பொங்கல் வைத்து, குல தெய்வத்திற்குப் படைத்துவழிபடும் பழக்கத்தையும் கொண்டுள்ளனர். புத்தாண்டின் முதல் நாள் இரவே பூசை அறையை சுத்தப்படுத்தி, ஒரு தட்டில் வெற்றிலைப்பாக்கு பழங்கள், நகை, ஆடைகள் வைத்து அதன் முன் கண்ணாடி வைத்து விடுவார்கள். புத்தாண்டு அன்று அதிகாலையில் எழுந்து கண்ணாடியில் இவற்றைக் கண்டு புத்துணர்ச்சியுடன் அந்த நாளைத் தொடங்குவது வழக்கம்.

அன்று வாசலில் மாக்கோலம் இட்டு வண்ணப் பொடிகளால் அலங்கரித்து, காவி இட்டு வாசலை அலங்கரிப்பார்கள். பூசை அறையையும் அவ்வாறே அலங்கரிப்பது வழக்கம். புத்தாண்டை வரவேற்கும் விதமாக வாசலில் மாவிலைத் தோரணம் கட்டுவதும் வழக்கம். பாரம்பரிய கலாச்சாரமாக இவைகள் இன்றுவரை பல வீடுகளில் தொடர்ந்து வருகிறது. வீட்டில் செய்த உணவுகளை மற்றவர்களுக்குப் பரிமாறி அதில் மகிழ்ச்சி காண்பார்கள். இனிப்பு களையும் ஒருவருக்கு ஒருவர் பரிமாறிக் கொள்வார்கள்.





அன்று இந்தியாவில் பல பகுதிகளில் வசிக்கும் மக்களும் பல பெயர்களில் இந்த தமிழ்ப்புத்தாண்டு விழாவை கொண்டாடுகிறார்கள். மேற்கு வங்கத்தில் "பொய்லா போயிஷாக்" என்ற பெயரிலும், கேரளாவில் "சித்திரை விஷூ" அல்லது "விஷூ கனி" என்ற பெயரிலும், பஞ்சாப்பில் "பைசாகி" என்ற பெயரிலும், அசாமில் "பிஹூ" என்ற பெயரிலும் இந்தப் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

மக்கள் எல்லோரும் விரும்பிக்கொண்டாடும் பண்டிகை ஒன்று உண்டு என்றால், அது சித்திரைப் பிறப்பு என்னும், தமிழ்ப் புத்தாண்டு விழாவாகும். எல்லா மக்களுக்கும் நல்லன எல்லாம் தந்துமகிழும் தமிழ்ப்புத்தாண்டை நாமும் வரவேற்று மகிழ்வோம். ஒருவருக்கு ஒருவர் உதவிசெய்து, ஒருவரோடு ஒருவர் ஒற்றுமையாய்த் திகழ்ந்து,இயன்றவரை இல்லாதோர்க்கு ஈந்து, எங்கும் மகிழ்ச்சி நிறைந்து,நோய்கள் இன்றி நலத்தோடு வாழ பிறக்கும் தமிழ்ப் புத்தாண்டு நல்லன எல்லாம் தந்திட இறைவன் அருளட்டும்!

இன்னுமொரு தலைப்போடு மீண்டும் உங்களைச் சந்திக்கிறேன் நண்பர்களே!என்ன சரிதானே!

கருத்துப் பகிர்வுக்கும், தொடர்பிற்கும்
9791033913,
aamchennai@gmail.com


நாம் நகரத்தார்
சமூக இணையதள மின்னிதழ்
இப்போது உங்களின் மேம்பட்ட
வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்
Naam Nagarathar Mobile App
இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...
GET IT ON Google Play

உடல் பிணிக்கு மட்டுமல்ல, வினைப் பிணிகளுக்கும்
உற்ற மருந்து வேல்மாறல் மகா மந்திரம்.

# வினைகள் தீர்க்கும் வேல்மாறல் மகா மந்திரம்

( வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள்
தொகுத்தருளியது )




**தினமும் பாராயணம்
செய்யும் வகையில் எளிய நடையில் புத்தகமாக**

- வேல் வழிபாடு
- வேல் மாறல் பொருள் விளக்கம்
- வேல் மாறல் பாராயணம் செய்யம் முறை
- முருகனின் முதற்கற்றளிக் கோயில்
  என பல்வேறு தகவல்களுடன்

விலை
ரூபாய்
**46/-**
தபால் செலவு தனி

வெளியீடு : அனுஷம் புக்ஸ் - கோவை

புத்தகத்தினை ஆர்டர் செய்ய :

**96590 32994**

எண்ணிற்கு வாட்சப் செய்யவும்

**தினமும் வேல் மாறல் பாராயணம் செய்து கலியுக கடவுள் கந்தன் அருள் பெறுவோம்**

# ஸ்ரீ நித்யகல்யாணி
## சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்

Sign of Commitment

SRI NITHYAKALYANI CHIT FUNDS (P) LTD.

NKF

Our culture is financial Discipline

Money is Easier when your
Proactive Plan with Nithyakalyani

1983 - 2025
43rd ANNIVERSARY

1 Lakhs to Crore

**Sri Nithyakalyani Chit Funds(P) Ltd.,**
#22, Lakshmi Road, TVS Nagar,
Madurai - 625 003.
Ph.No: 0452 - 2692680, Mob.No: 9786300304,
E-mail : sncfco@gmail.com

### Branches

| | | | |
|---|---|---|---|
| Madurai Main 98430 93250 | Trichy 98432 91654 | Arasaradi/mdu 73391 25777 | Thirunagar/mdu 84899 10191 |
| Dindigal 98432 91652 | Coimbatore 82200 52338 | Erode 75581 99888 | Srivilliputhur 70944 61192 |
| Anna Nagar/mdu 98432 91653 | Reserveline/mdu 98430 93256 | Aruppukkottai 73589 91777 | Dindigul (Regl.) 75581 99777 |

# வாங்க பேசலாம்..!

## (செட்டிநாட்டு வட்டாரச் சொற்கள்)

பகுதி –14



– பேரா. கு. அன்புமெய்யப்பன்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தால் மட்டும் தனித்துவமாகப பேசப்பட்ட, பேசப்படுகின்ற சொற்களைத் தற்காலத் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதே இத்தொடரின் நோக்கம் ...வாங்க பேசலாம் ..!

### இக்கட்டு

"இட்டுக்கட்டிப் பேசுறதுல நம்ம, வளையபட்டி கணேசன மிஞ்ச ஆளில்லை" என்று வயதில் முதியவர்கள் பேசக் கேட்டிருக்கலாம். இட்டுக்கட்டுதல் என்பது இல்லாததை ஏற்றிச் சொல்வது.



அதாவது கற்பனை கலந்து சொல்வது எனப் பொருள் கொள்ளலாம். தன் செயலை நியாயப்படுத்த இல்லாதை செய்யாததை இருப்பதாகவோ, செய்ததாகவோ கற்பனை கலந்து பேசுவது இட்டுக்கட்டிப் பேசுவது என்றழைக்கப்படுகிறது.

## இலவங்கப்பட்டை

" அப்பச்சி! கல்யாண மளிகைச் சாமான் சிட்டையில லவங்கப்பட்டைய மறந்துறாதப்பா. போன தடவ மறந்துபோயி கடைசி நேரத்துல அவதிப்படுற மாதிரி ஆகிப்போச்சு" என்று அப்பத்தாக்கள் அக்கறையில் பேசுவதைக் கேட்டிருப்போம்.



சமையலில் வாசனைக்காகச் சேர்க்கப்படும் ஒரு வத பட்டை. இலவங்கப்பட்டை என்பதே மறுவிய சொல். இடங்கப் பட்டை என்பதே இலவங்கப் பட்டை என்றழைக்கப்பட்டு வருகிறது. இலவங்கம் – இலங்கம் – இடங்கம் +பட்டை= இடங்கப்பட்டை என்றானது.

## இடியப்பம்

நம் வீட்டு நிகழ்வுகளில் இடியப்பம் இல்லாமல் பலகாரம் அமையாது. சிற்றுண்டி வகைகளுள் ஒன்று.



இடி+அப்பம்= இடியப்பம் எனவும் இடியாப்பம் எனவும் வழங்கப்படுகிறது. இடித்த மாவினை நீரோடு கலந்து செய்த உணவு எனப் பொருள் கொள்ளலாம்.

## இணுக்கு

"ஆத்தா! மீனா, கருவப்பிள்ள ஒரு இணுக்கு பறிச்சுட்டு வா ஆத்தா. எண்ணை காய்ஞ்சுருச்சு" என்ற அப்பத்தாவின் அவசரத்தில் இணுக்கு என்ற சொல் புதுமையானது. இணுக்கு என்றால் கைப்பிடியளவு என்பது பொருள். ஒரு இணுக்கு என்றால் ஒரு கருவேப்பிலைக் கொத்து என்பது பொருள்.

## இம்மி

இம்மி அளவு கூட பிசகாது என்று கூறுவதில் உள்ள இம்மி என்பது மிகக் குறைந்த அளவு எடையைக் குறிக்கும் சொல். மிகச் சிறய அளவு கூட தன் செயல் பிழையாகாது என்பதற்காகப் பயன்படுத்தப்படுகிற சொல் இது.

## இரட்டை நாடி

"அந்தப் பையன் ரெட்டை நாடியா இருக்கான்" என்பதில் ரெட்டை நாடி என்பது தடித்த உடம்பினைக் குறிக்கும். இயல்பான அளவை விட உடல் பெருத்தவர்களை இவ்வாறு இரட்டை நாடி என்றழைப்பர்.

## இரண்டாங்கட்டு

"கருப்பாயி! செட்டியாரு வளவுள இருப்பாக. நீ பின்பக்கமா ரெண்டாங்கட்டுக்கு வந்துரு" என்று ஆச்சிகள் ஒரு காலத்தில் சொல்வதைக் கேட்டிருப்போம்.



இரண்டாங்கட்டு என்பதே ரெண்டாங்கட்டு என்று பேச்சுவழக்கில் சொல்லப்படுகிறது. இரண்டு+ஆம்+கட்டு= இரண்டாங்கட்டு. வீட்டின் இரண்டாம் பகுதி என்பது பொருள்.

### இரண்டுங்கெட்ட நேரம்

"ஏண்டி! இப்படி ரெண்டுங்கெட்ட நேரத்துல வந்து சேந்துருக்க" என்ற வாக்கியத்தில் உள்ள இரண்டுங்கெட்ட நேரம் என்பது பகலும் அல்லாதத இரவும் அல்லாத அந்திப் பொழுதைக் குறிக்கப் பயன்படுத்தபட்ட சொல்.

### இரண்டுங்கெட்டான்

"இன்னக்கி கலியாணத்துல, மீனா ஆச்சி மகனுக்கிட்ட பேசுனேன், அவன் ரெண்டுங்கெட்டானா இருக்கானே?" என்பதில் இரண்டுங் கெட்டான் என்பதே ரெண்டுங் கெட்டான் என மருவி வழங்கி வருகிறது. இரண்டும்+ கெட்டான் = இரண்டுங்கெட்டான். இரண்டும் – நம்மை, தீமை என்ற இரண்டையும் அறியாதவர்களை இவ்வாறு கூறுவர்.



## இரவுக்கை

"கல்யாணத்துல பரப்ப சேல வாங்கி ரவுக்கையெல்லாம் தச்சாச்சா" என்று பெண்கள் பேசுவதில், ரவுக்கை என்பது பெண்கள் அணியும் சட்டையைக் குறிக்கிறது. இறவு – இறவுதல் = சுற்றுதல். இறவுகை – இறவுக்கை – இரவுக்கை என்றாகிறது. பெண்கள் உடலைச் சுற்றி அணியும் சட்டை என்பதைக் குறிக்கும் இறவு என்ற சொல்லே இரவுக்கை என்றாகியிருக்கிறது.

– தொடர்ந்து பேசுவோம்

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

# ஓர் வேண்டுகோள்

## விளம்பரம் அல்லது நன்கொடை
## கொடுத்து உதவுங்கள்

**வாசகர்கள் அன்பான கவனத்திற்கு**

கடந்த மூன்று ஆண்டுகளாக நமது மின்னிதழ் உலகளாவிய நகரத்தார் பெருமக்களுக்கு இலவச இதழாக சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் – மொபைல் செயலி (Mobile App) மூலமாகவும் மாதம் தோறும் வழங்கப்பட்டு வருகிறது. மின்னிதழை அனைவரும் தங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு பகிர்கிறார்கள்.

நகரத்தாரின் பண்பாட்டினை இன்றைய தலைமுறையினர் அறியும் வண்ணமும், நகரத்தார்களின் வாசிப்பை வளர்க்கும் விதத்திலும் தொடரும் எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம்.

**இதழின் வளர்ச்சியில் தாங்களும் பங்கேற்கும் வகையில் விளம்பரங்களும், நன்கொடைகளையும் அளித்து உதவுங்கள்.**

**அலைபேசி எண்ணில் G Pay செய்ய:**

**97917 76534**


**UPI Pin: senaadigital@okicici**

இதழில் விளம்பரம் செய்ய
கீழ்கண்ட எண்ணில் அழைக்கவும்.

**96590 32994**


# மழலை மழைத்துளிகள்..!!!

குழந்தைகளுக்காக எழுதப் பட்டாலும் அனைவருக்குமான கவிதைகளின் அணிவரிசை இந்த மழலை மழைத்துளிகள்



கல்லல்
மீ.மணிகண்டன்
Texas - USA

## மாதமும் காலமும்



ஆண்டுத்திங்கள் பன்னிரெண்டில்
… அமைந்தது ஆறு காலங்கள்
சித்திரை வைகாசி இளவேனில்
… ஆனி ஆடி முதுவேனில்
ஆவணி புரட்டாசி அடை மழையாம்
… ஐப்பசி கார்த்திகை குளிர் தருமாம்
மார்கழி தையும் முன்பனியாம்
… மாசி பங்குனி பின்பனியாம்!

## சித்திரையும் தவளையும்

கத்திக் கத்தி குட்டித் தவளை
… அருகில் அழைத்தானே
சுத்திப் பார்த்தேன் யாரும் இல்லை
… அருகில் சென்றேனே
எத்தனை சூடு அப்பப் பாவென
… அலுத்துக் கொண்டானே
சித்திரை வானம் பொல்லாதவன் என
… கிணற்றில் குதித்தானே!





# KRISHNANJALI

## MUSICAL TRAINING CENTRE

New D.No.6/1 (Old No.45-B), LIC Colony, Subramaniapuram 2nd Street,
R.S.Puram, Coimbatore – 641 002
Ph: 0422-4507493, Cell : 94437 42695
Website : www.krishnanjali.in / Mail : krishnamusicals@gmail.com

TIME SCHEDULE – EACH 1 HOUR (SUBJECT TO CHANGE)
MORNING SESSION ONLY – 10.00 AM TO 1.00 PM

40 DAYS / MONDAY TO FRIDAY / 10.04.2025 TO 31.05.2025)

| | |
|---|---|
| 1. DRUMS/ KEYBOARD/ GUITAR/ VIOLIN/ FLUTE | : 10.00 AM – 11.00 AM |
| 2. VOCAL/ KEYBOARD/ GUITAR/ VIOLIN/ FLUTE | : 11.00 AM – 12.00 PM |
| 3. DANCE/ KEYBOARD/ GUITAR/ VIOLIN/ FLUTE | : 12.00 PM – 01.00 PM |

## CRASH COURSES– FEE STRUCTURE (INDIVIDUAL COURSE) SUMMER 2025

| S.No. | Course | Regn. Fee (Rs.) | Course Fees (Rs.) | Cost of Materials (Rs.) | Total (Rs.) |
|---|---|---|---|---|---|
| 1 | CARNATIC VOCAL | 501 | 3500 | 250 | 4251 |
| 2 | CLASSICAL DANCE | 501 | 3500 | 250 | 4251 |
| 3 | KEY BOARD | 501 | 3750 | 250 | 4501 |
| 4 | GUITAR | 501 | 3750 | 250 | 4501 |
| 5 | VIOLIN | 501 | 3750 | 250 | 4501 |
| 6 | DRUMS | 501 | 3750 | 250 | 4501 |
| 7 | FLUTE | 501 | 2750 | 250 | 3501 |
| 8 | Group any 3 courses including 1 instrument | 501 | 8500 | 750 | 9751 |

**P.S.** : Students joining in Keyboard, Guitar, Violin and Drums classes should bring their respective instruments to the class daily, without fail. All instruments are available in the institute ifself, at concessional rates for students and it is MANDATORY TO BUY THE QUALITY INSTRUMENTS AT OUR CENTER in order to maintain uniform practice among all students.

**NO REGISTRATION FEE for old/existing students for Summer Camp**

# மீனாட்சி திருக்கல்யாணம்

– மெ.சண்முகம், காரைக்குடி



அங்கயற்கண்ணி ஆலவாய் அண்ணல் கோலோச்சும் நான் மாடக் கூடலாம் மதுரையம்பதியில் நன் முத்து வளம் சேர்த்த பாண்டிய மன்னன் புகழ் காக்க வந்து பிறந்தாள், உமையவள்.மீனாட்சி பேர் கொண்டு, கயல்(மீன்)போல் விழி கொண்டு. மன்னன் மகளன்றோ! செறுக்குற்றால் அதனாலே. தங்கச் சிலையானால் அழகாலே! மன்னன் தன் மகளை மதுரைக்கு அரசியாக்கி பட்டாபிஷேகம் செய்தான்.

மதுரையம்பதியில் கோயில் கொண்டிருந்த ஈசன்,மீனாட்சியின் அழகில் சொக்கிப் போய், சொக்கநாதர் ஆனார். ஆம் அவளின் அழகில் மயங்கிய அழகிய ஈசராகி,(சோம என்றால் மயக்கம். சுந்தரம் என்றால் அழகு என்று பொருள்) சோமசுந்தரேஸ்வரரானார். மீனாட்சியை மணம் முடிக்க விரும்பினார். இருப்பினும், மீனாட்சியின் செறுக்கையும் அடக்க விரும்பினார்.



மீனாட்சிக்கும் சுந்தரேஸ்வரருக்கும் திருமணம் நிச்சயிக்கப் பெற்றது. திருமண நாளும் வந்தது. பாண்டிநாடு விழாக் கோலம் கொண்டது. மதுரை எங்கும் கோலாகலம், குதூகலம், ஆலவட்டம், தோரணம், கனகவாத்தியம் ஒலித்தது. அம்பதாயிரம் அண்டா, எண்பதாயிரம் ஏனம், ஒன்பதாயிரம் அரிவாள்மனை இன்னும் என்னவெல்லாமோ கொண்டு மதுரையையே மடப்பள்ளி ஆக்கி லட்சோபலட்சம் சமையல்காரர்கள் கூடி, கல்யாண விருந்து படைத்தனர். ஆம் அதனால் தான் அது திருக்கல்யாண விருந்து ஆயிற்று.

மீனாட்சி பக்கமோ, மாதா, பிதா, பந்துக்கள், சேனை, சேகரம், ஆள், அடிமை, அம்பலம் எனப் பற்பலர் கலந்து கொண்டனர். ஆனால், ஆதி அந்தமில்லா ஈசன் பக்கம் சிற்சில குண்டர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். மீனாட்சியைப் பாண்டிமன்னன் கன்னிகா தானம் செய்து கொடுத்தான். மீனாட்சி திருக்கழுத்தில் ஈசன் திரு மாங்கல்யம் பூட்டினார். தேவலோகமே கண்டு மகிழ்ந்தது.

உங்கள் பக்கம் ஒருவரும் இல்லையே! அது ஒரு புறம் இருக்க, சமைத்த உணவு மிஞ்சி விட்டதே, என்று பெண்ணுக்கே உரிய வேதனையிலும், கோபத்திலும் அன்னை எள்ளி நகையாடினாள். ஈசனோ என்னவர்கள் உளரே! என்று சொன்னார். அவர்கள் உண்டனர். மாமதுரையே காலி ஆகிவிட்டது. மீனாட்சி அதிர்ந்து போனாள். அவர்கள் தண்ணீர் குடித்தனர்.போதவில்லை. வானம் பொழிந்தால்தான் இனித்தண்ணீர் என்ற நிலை ஏற்பட்டது. தண்ணீருக்கு, ஈசனைக் குண்டர்கள் வேண்டினர். ஈசன் அவர்களை மதுரையின் ஒரு பகுதிக்கு அழைத்துச் சென்று, கை வை என்றான்.

தண்ணீர் பிரவாகம் எடுத்து ஆறாய் ஓடியது. வைகை பிறந்தது. குண்டர்கள் தாகம் தீர்ந்தது. ஆம் மீனாட்சி கர்வம் நீங்கி, ஈசன் திருவடி பற்றி, அங்கயற்கண்ணி சமேத சோமசுந்தரேசுவரராகி அகிலம் காத்தாள். வானவர் பூமாரி பொழிந்து, புகழோவியம் படைத்தனர்.



அன்னையின் அண்ணனாம் அழகரோ, தங்கக் குதிரையைத் தாங்கித் தடுக்கிட்டுத் தல்லாகுலம் வந்து சேர,திருமணம் முடிந்தது பற்றி எதிரில் வந்தவர்கள் சொல்லி எதிர் சேவை செய்ய, அவரோ அரை மனதோடு மதுரையம்பதியில் கால் வைக்க, கால் வைத்த இடமோ வைகை. ஆம்,'ஸ்ரீரங்கம் ஆடித் திருப்பாற்கடலாடி, மாமங்கம் ஆடி மதுர கடலாடி' என்ற சொல்லுக்கு இணங்க, வைகை கடல் போல் காட்சி அளிக்க, முன்பொரு காலத்தில், திருமாலை வேண்டித் தவம் இருந்து, பிற தேவர்களின் சாபத்திற்கு உள்ளாகி,

தவளை உருக் கொண்ட மண்டூக மகரிஷி சாபவிமோட்சணம் அடைந்தார். ஆனால், அழகரோ, நாம் வரும் முன்னரே திருமணம் முடிந்து விட்டதே என்ற வருத்தத்தோடு தமது திருமாலிருஞ் சோலை சென்றடைந்தார்.

இது அன்னை மீனாட்சியின் கர்வம் நீங்க ஈசன் செய்த திருவிளையாடல்ப் புராணக் கதை என்று நினைக்கிறோம். இல்லை, இது அகில மக்கள் அனைவரும் கர்வமின்றி வாழ வேண்டும் என்பதற்கான நன்னெறி அன்றோ!

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

# தமிழின் அருமை

இளமை மாறாத இனிய மொழி
முதுமை இல்லா மூத்தமொழி

தொன்மை வாய்ந்த தூயமொழி
தொல்காப்பியம் கொ(க)ண்ட மொழி

தேஞ்சுவை ததும்பும் தனிமொழி
எத்திக்கும் பரவிய வண்டமிழ் மொழி

அகத்தியன் உரைத்த அருந்தமிழ்மொழி
அயல் நாட்டவரையும் ஈர்த்த மொழி

அகநானூறு புறநானூறு கண்ட மொழி
அறிஞர் போற்றும் ஆராய்ச்சி மொழி

சங்கம் வளர்த்த முத்தமிழ் மொழி
சகலரும் ரசிக்கும்  தீந்தமிழ் மொழி

கல்வெட்டுகள் கண்ட கருந்தமிழ் மொழி
காலம் கடந்தும் நிலைக்கும் மொழி

அன்னை கற்பித்த அருமை மொழி
ஔவை பாடிய பைந்தமிழ் மொழி




இயற்கை மருத்துவம்  பகரும் மொழி
இயல் இசை நாடகம் இசைக்கும் மொழி

பார் போற்றும் பண்டைய மொழி
சீர் வளமிகுந்த செந்தமிழ் மொழி

தமிழ்த்தாய் மொழிந்த  தங்க மொழி
தமிழ் இனத்தின் தலையாய மொழி

பண்பாடு கலாச்சாரப் பெருமை உள்ள மொழி
அன்போடு வளர்ப்போம் அழகுத் தமிழை இனி



–அரு.சிவகாமி இராமனாதன்,
–ஒக்கூர்– நவிமும்பை

பெண் கதவு... ஆண் பூட்டு..! – 14

# பெற்றதே உற்றது



நல்லாசிரியர்
சேவு.முத்துக்குமார்
காரைக்குடி
+91 94432 88931

முள் குத்தினால் கத்தும் நாம், மருத்துவர் ஊசி போடும்போது தாங்கிக் கொள்கிறோம். வலி ஒன்று தான் ஏற்றுக் கொள்ள துணிந்து விட்டால் வேதனையும் தூசிதான், இல்லறமும் இன்பம் தான்.

பஞ்சணையில் இன்பம் வேண்டும் என்றால் பாயில்படுத்துப் பழகிக் கொள்ள வேண்டும். பஞ்சணையே பழக்கமாகிவிட்டால் அது துன்பத்தையே தரும். இல்லற வாழ்க்கையும் அவ்வாறே கணவனும் மனைவியும் எளிமைக்கு இறங்கி நின்று வாழப் பழக வேண்டும், பின் வாழ்க்கை மாறும் பொழுது பஞ்சணை போன்ற சுகங்கள் வரும் பொழுது வெறுப்பும் சலிப்பும் தோன்றாது.



அதிகாலை எழுந்து குளித்து முடித்து கடவுள் முன்னால் அமர்ந்து 'ஓம் ஓம்' என்று மந்திரத்தைச் சொல்வதைவிட மனைவி முன்னால் எப்பொழுதும் 'ஆம் ஆம்' 'ம்ம்... ம்ம்' என்ற மந்திரத்தை சொன்னாலே போதும், எந்த கடவுளும் உதவி செய்யாமலேயே இல்லறம் சிறக்கும். 'ஆம்' எனும் மந்திரமே உலகில் தலைசிறந்த மந்திரம். நிம்மதி கடலில் நீந்த 'ஆம்' எனும் மந்திரத்தை சொல்லிப் பழக வேண்டும் கணவன்மார்கள்.

பொறந்தாலும் ஆம்பளையா பொறக்கக்கூடாது.
பொறந்துவிட்டா பொம்பளைய நினைக்கக் கூடாது

திரைப்படத்தில் சந்திரபாபு பாடி ஆடிய புகழ்பெற்ற பாடல் இது. சமூகத்தில் ஆணுக்கான பிரச்சனைகள் அதிகம். குடும்பத்தில் ஆண்களைவிட பெண்கள் அதிக மன உளைச்சலுக்கு, ஆளானாலும், அதை அவர்கள் கடந்து சென்றுவிடுகின்றனர். ஆனால் ஆண்களே பிரச்சனைகளைக் கண்டு அதிகம் தற்கொலை செய்து கொள்வதாக ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. காரணம் பணிச்சுமை, கடன் தொல்லை, குடும்பப் பிரச்சனை.



பெண்ணுக்கு ஒரு பிரச்சனை வந்தால், அதைத் தீர்க்க பலர் போட்டி போட்டு வருகின்றனர். ஆனால் ஆணுக்கு ஒரு பிரச்சனை என்றால் அதை அவனே தீர்த்துக்கொள்ள வேண்டும் என சமுதாயம் நினைக்கிறது.

பெண்களைப் போல ஆண்களுக்கு பதற்றம், கவலை எல்லாம் உண்டு, உணர்ச்சிகள் என்பது இருவருக்கும் பொதுவானது. பெண்கள் மகிழ்ச்சியோ, துக்கமோ உடனே வெளிபடுத்திவிடுவர், ஆண்களோ மனதிலே வைத்து மகிழ்வர் அல்லது கவலை அடைவர். இதன் வெளிப்பாடே பெண்கள் நீண்ட நாள் உயிர் வாழ்வதும், ஆண்கள் போய்ச்சேருவதும் ஆகும்.

ஆணின் உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டு அதனை ஏற்றுகுடும்பம் நடத்தப் பெண்கள் பழகிக் கொள்ளுதல் நலம்.



தற்பொழுது ஆண், பெண் இருவருமே வேலைக்குச் செல்கிறார்கள். திருமணத்திற்கு மாப்பிள்ளை தேடும் போது, பெண்ணைவிடஆண் அதிகம் சம்பாதிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மேலோங்குகிறது.

இதனால் வரும் அழுத்தத்தை ஆண்கள் சமாளிக்க முடியாமல், மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாகி, திருமண வாழ்க்கையைத் தள்ளிப் போடுகிறார்கள். இந்த நிலைமை மாற வேண்டும். அதே வேளையில் உடல் ரீதியாக ஓர் ஆண் வலுவானவனாக இருப்பதால் அவனே குடும்பத்தின் பாதுகாவலனாக இருக்கின்றான். அவனது உத்தரவுகள் குடும்பத்தில் மதிக்கப்பட வேண்டும் என எண்ணுகிறான். ஆண் தனது தாய், மனைவி குழந்தையின் எண்ணங்களுக்கு மதிப்பு அளிக்க வேண்டும், அவர்களது மனநிலையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அப்பொழுது தான் அவன் தன்னை குடும்பத் தலைவன் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ள முடியும், அதை விடுத்து நான் ஆண், இப்படித்தான் இருப்பேன், எனக்கு நீங்கள் கட்டுப்பட்டவர்கள், என் உத்தரவை மீறி நடந்தால் தண்டிக்கப்படுவீர்கள் என ஆணவத்தோடு நடந்தால் இல்லறம் இனிக்காது. ஆண்மை பேராண்மை ஆவது பெண்களை மதிக்கும் போது தான் என்பதை ஒவ்வொரு ஆணும் புரிந்து கொள்ள வேண்டும்.

கூந்தல் நீளமாக இருக்கிற பெண்ணைத் தேடும் ஆணுக்கு வாய் நீளமாக இருக்கிற பெண், கிடைத்தால் "நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்" என்று மனதை சமாதானப்படுத்திக் கொண்டு வாழ்க்கையை வாழவேண்டும், இதுவே நல்ல ஆணுக்கு அழகு.

திருமணம் என்பது நண்பர்களுடன் உணவகத்திற்குப் போவது மாதிரி, நாம் கேட்ட உணவு வந்த பிறகு அடுத்தவர் தட்டைப் பார்த்து அதையே நாமும் கேட்டிருக்கலாமே என்று தோன்றும்.

ஆணோ, பெண்ணோ தனக்கு அமைவது நெட்டையோ, குட்டையோ, சிவப்போ, கருப்போ, குண்டோ, ஒல்லியோ, இருப்பதைக் கொண்டு திருப்தி அடைவதே வாழ்க்கை, புலம்பிக் கொண்டிருப்பதால் எதுவும் கிடைக்காது, பெற்றதை உற்றதாகக் கொண்டு, திருப்தி அடைவதே வாழ்க்கை. இதை ஆணும் பெண்ணும் புரிந்து கொண்டு நடப்பது நன்று.



மனைவி ஒருத்தி கணவனைப் பார்த்து கேட்டாள். "ஏங்க.. இன்னைக்கு நான் குழம்பு வைக்கட்டுமா, ரசம் வைக்கட்டுமா, சொல்லுங்க" என்றாள்..

"முதல்ல ஏதாவது ஒண்ணு வை... அப்புறம் அதுக்கு பேர் வச்சுக்கலாம்" என்றான் கணவன். இப்படித்தான் நிறைய கணவர்கள் கிடைத்தது சாம்பாரா, ரசமா எனத் தெரியாமலேயே திருப்தி அடைந்து கொண்டு இருக்கிறார்கள்.

ஒவ்வொரு விஷயத்திலும் அறியாமை மிக்க மனைவிகளோடு போராடும் கணவர்கள் ஒரு புறம் இருக்க, அலட்சியம், பொறுப்பின்மை, தான்தோன்றித் தனம் உடைய கணவர்களோடு போராடி வாழும் பெண்களின் நிலையோ பரிதாபம்.

குடித்துவிட்டு தினமும் வந்து தொல்லை பண்ணும் கணவனின் செய்கைகள் பொறுக்காமல், அம்பிக்கல்லை தலையில் போட்டும், ஆணுறுப்பை அறுத்தும், சாப்பாட்டில் விஷம் கலந்தும் அவனை பரலோகம் அனுப்பும் பெண்களின் நிலை பரிதாபம், அன்றாட

செய்திகளில் படிக்குந்தோறும் வேதனை மிஞ்சுகிறது.

குடிப்பழக்கம் மிகுந்த கணவனைத்திருத்த ஒரு பெண், தன்னை கொடூரமான பேயாக மாற்றிக்கொண்டு அவன் வரும் வழியில் பயமுறுத்துவதற்காக நின்று கொண்டிருந்தாள். வழக்கம் போல் வேட்டி விலகியது கூடத் தெரியாமல் "யாரை நம்பி நான் பொறந்தேன்" என தடுமாறி அவன் வந்தான், திடீரென அவன்முன் தோன்றி அலறிக் கொண்டே நின்றாள் அவள். "யார் நீ? என அவன் கேட்க நான் தான் பேய்" என்றாள். அவன் பயப்படவே இல்லை. "அப்படியா நல்லது என்னோடு வீட்டுக்கு வா...உங்க அக்கா ஒருத்தி இருக்கிறாள். அவளைக் காட்டுகிறேன். அவளைத்தான் நான் கல்யாணம் செய்துள்ளேன்" என்றாள்.




இப்படித்தான் இல்லறமென்பது இன்பச்சோலையாக இல்லாமல் கணவன் புறத்தே வேறு ஒன்றைத் தேடுவதும், மனைவி அகத்தே, மன அழுத்தத்தோடு அல்லாடுவதும் பலகுடும்பங்களில் நடக்கிறது. பெற்றதே உற்றது என வாழ்ந்துவருவோர் நம் நாட்டில் அதிகம்.

எல்லாம் குறிப்பிட்ட காலம் வரையில் தான், வயது ஏற ஏற, உடல் தளர தளர புத்தி உணர்த்த உணர்த்த, ஆட்டமெல்லாம் அடங்கிவிடும். பொறுமை கடலினும் பெரிது என சொல்லி சொல்லி வளர்த்திருப்பதால், இல்லறத்தில் பொறுமை காத்தல் மிக நன்று. நமக்காக அல்ல, வளரும் நம் பிள்ளைகளுக்காக பெற்றதைக் கொண்டு வாழ்வதே வாழ்க்கை, என்று சொல்லிச் சொல்லி வளர்க்கும் சமுதாயத்தை மீறினால் சங்கடங்களோடும், அவமானங்களோடும் போராடத்தான் வேண்டும்.

நன்றி : ஓவியம். மோகன் மணிமாலா





# சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாள்

– ச.முத்துலெட்சுமி,
திருநெல்வேலி
9940484885



சென்ற இதழ்களில், ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் பிறந்து வளர்ந்த நிகழ்வுகளையும், ஆண்டாள் நாச்சியார் எப்படி கண்ணனைத் தான் சரணாகதி அடைவது என்று பெரியாழ்வாரிடம் கேட்டு முயற்சித்த நிகழ்வுகளையும், பாவை நோன்பு,ஆண்டாள் நாச்சியார் அருளிச் செய்த திருப்பாவை, கடவுளை அடைய முக்கியமான 4 விதமான வழிகள், குறிப்பாக நாயன்மார்களும் ஆழ்வார்களும் பின்பற்றிய நாயக நாயகி பாவம் பற்றியும், அறிவியல் பூர்வமான காலதத்துவத்தையும், மந்திரங்களினால் நீரில் உண்டாகும் அதிசயங்களை பற்றியும் கண்டோம்.

இந்த இதழில்,

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமது தமிழ்ப் பெண் மழை எப்படி பொழிகிறது என்ற அறிவியல் நுட்பத்தை செறி வார்ந்த நமது தமிழ் இலக்கணம் தப்பாமல், பக்தி மற்றும் அறிவியலை எவ்வாறு தம்பாசுரத்தில் புகுத்தி, அதற்குக் காரணம் கண்ணனே என்று கூறி, அனைவரும் அவனைப் பிரார்த்தனை செய்யப் பணிக்கிறார் என்பதையும், வாரணமாயிரம் சூழவலம் செய்து, பாடலின் மூலம் ஒரு கன்னிப் பெண்ணின் மனநிலையில் எவ்வாறு இறைபக்தியை அடையமுடியும் என்பதை அனாயசமாக விளக்குகிறார் என்பதையும் பார்க்கலாம்!

மற்றும் ஆண்டாள் நாச்சியாரின் திருமண வைபவம் பற்றி விரிவாக பார்ப்போம். ஜீவாத்மா பரமாத்மாவோடு கலந்து பரமபதத்தை அடையும் சரணாகதி தத்துவத்தை விளக்குவது தான் ஸ்ரீஆண்டாள் நாச்சியாரின் சரித்திரம்.

ஸ்ரீஆண்டாள்தாயாரின் ஒவ்வொரு பாசுரமும் ஆன்மீகமும் அறிவியலும், தேடத்தேட கிடைக்கும் முடிவில்லா பொக்கிஷமாகும். இருந்தாலும் இந்த இதழில் இக்கட்டுரை நிறைவடைகிறது.

"மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன் நாளால்..." எனத் துவங்கி "வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை" என முடியும் 30 பாசுரங்களை பாடி, மார்கழி மாதத்தின் 30 நாளுக்கும், 30 பாசுரங்களை திருப்பாவையில் அருளிச்செய்திருக்கிறார் ஆண்டாள்.

இந்த முப்பது பாசுரங்களில் நான்காவது பாசுரமான "ஆழிமழைக்கண்ணா!" எனத் தொடங்கும் பாசுரம், இன்றளவும் கோடைக் காலத்தில் மழை வேண்டி அனைவராலும் பாடப்படுகிறது.

அதன் முழு விளக்கம் என்னவென்றால்,

மூன்றாம் பாசுரத்தில் நோன்பு நோற்பதால் கிடைக்கும் பலனைச் சொன்னார் ஆண்டாள். மும்மாரி பெய்து பசுக்கள் பாலால் இல்லம் நிறைத்து செல்வம் பெருகும் என்றவர், இந்தப் பாசுரத்தில் தாம் சொன்ன சுபிட்சத்துக்காக கண்ணனே கருணை மழையாகப் பொழிய வேண்டும் என்று வேண்டுகிறார். மழை மண்டலத்துக்குத் தலைவனாக விளங்கும் கண்ணனே! உன் கொடையில் எதையும் நீ ஒளிக்காமல் அருள வேண்டும். நீ செய்ய வேண்டிய பணி ஒன்றும் உண்டு.





அது, நீ கடலினுள் புகுந்து, அங்கிருந்து நீரினை முகந்து கொண்டு பேரொலி எழுப்பி கர்ஜனை செய்து, ஆகாயத்தின் மேல் ஏறி, ஊழி காலம் முதலான அனைத்துக்கும் காரணனாக விளங்கும் எம் பெருமானின் திருமேனியைப் போலே கறுத்து, பெருமை பொருந்திய சுந்தரத் தோளுடையானும், நாபியிலே கமல மலர் கொண்டு திகழும் பெருமானின் வலக்கையிலே திகழும் சக்கரத்தாழ்வானாகிய திருவாழியைப் போலே ஒளிர்ந்து, இடது கரத்தில் திகழும் பாஞ்சஜன்யப் பெரும் சங்கினைப் போலே நிலை நின்று முழக்கி, உன் சார்ங்கம் ஆகிற வில்லில் இருந்து விரைந்து புறப்படும் அம்புகளைப் போலே, இந்த உலகத்தார் அனைவரும் வாழும் படியாகவும், கண்ணன் எம்மானுடன் கலந்து மகிழ நோன்பு நோற்கும் நாங்களும் உளம் மகிழ மார்கழி நீராட்டம் செய்யும்படி, தாமதம் ஏதுமின்றி மழை பொழிய வைத்திடுவாய்... – என்று கண்ணனை வேண்டுகிறார் ஆண்டாள்.

மழை எப்படிப் பொழிகிறது என்ற அறிவியல் நுட்பத்தைத் தம் பாசுரத்தில் புகுத்தி, அதற்குக் காரணம் கண்ணனே என்று கூறி, அனைவரும் அவனைப் பிரார்த்தனை செய்யப் பணிக்கிறார் ஸ்ரீஆண்டாள் நாச்சியார்!

இப்படி பக்தி மார்க்கத்தில் நாயக நாயகி பாவத்தை ஏற்று கண்ணன் மீது ஆண்டாள் பக்தி செலுத்தினார். கண்ணன் ஆகிய பரந்தாமனை நாயகனாகவும், ஆண்டாளையும், அவர் தோழிகளையும், நம் அனைவரையும் நாயகியாகவும் பாவித்து கண்ணனை சரணாகதி அடைவதாக ஆண்டாள் நாச்சியாரின் பக்தி பாடல்கள் இருக்கின்றது.

அதாவது இந்த பூத உடலுக்கு தான் ஆண் பெண் எனும் வித்தியாசம் உண்டு.  சூட்சும உடலுக்கு எந்த வித்தியாசமும் இருக்காது.

அதை ஆத்மா, ஆன்மா அல்லது ஜீவன் என்று சொல்வர். ஆண்டவனை பரமாத்மாவாகவும், நம்மை ஜீவாத்மாவாகவும் சொல்வர். ஜீவாத்மா பரமாத்மாவை சரணாகதி அடைவது தான் வாழ்க்கை தத்துவம்.



இப்படி நாயக நாயகி பாவத்தை ஏற்று கண்ணனை சரணாகதி அடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் கண்ணன் மீது பல பாசுரங்களை பாடி பக்தி செலுத்தினார் ஆண்டாள். இருப்பினும் கண்ணன் தன்னை ஏற்றுக்கொள்ளவில்லையே கண்ணனே சரணாகதி அடைய முடியவில்லை என்ற வருத்தத்துடன், மேகம், குயில், கிளி என ஒவ்வொன்றாக தூது அனுப்பினார் ஆண்டாள். அவ்வாறு தூது அனுப்பும் நிலையில் ஒரு நாள் ஒரு அழகிய கனவைக் கண்டார் ஆண்டாள். அந்தக் கனவை மறுநாள் தன் தோழிகளிடம் மகிழ்ச்சியாக பகிர்ந்து கொண்டிருந்தார்.

அதுதான் இந்தப் பாடல்.....

**வாரண மாயிரம் சூழ வலம்செய்து,**
**நாரண நம்பி நடக்கின்றான் என்றெதிர்,**
**பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்,**
**தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீநான்**

என அவள் கனவில் வந்த காட்சிகளையும், கண்ணன் மீது காதல் கொண்டு பாடிய பாடல்கள் அனைத்தும் நிறைந்ததுதான் நாச்சியார் திருமொழி என்கிற 1 4 3 பாசுரங்களைக் கொண்ட பிரபந்தம். கோதையை திருமணம் செய்து கொள்ள கோவிந்தன் மணக் கோலம் கொண்டு வருகிறான். அப்படி வரும் போது அவனைச் சுற்றி ஓராயிரம் யானைகள் உடன் வருகின்றன. அவனை அந்த ஊரே பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்கிறது. இவ்வாறு கண்ணன் மணப்பந்தலுக்கு வரும் அழகையும் கம்பீரத்தையும் தோழிகளிடம் சொல்லி பூரிக்கிறாள் கோதை. இந்தப் பாடலைத்தான் இன்றைக்கும் வைஷ்ணவ முறைப்படி நடக்கும் திருமணங்களில் தேங்காய் உருட்டும் போது பாடுவார்கள். ஆண்டாள் இந்தக் கனவைப்பற்றி

தன்னுடைய தோழிகளிடம் சொல்லும்பொழுது பெரியாழ்வார் அதைக் கேட்டு விடுகிறார். அப்போது அவருக்கு கோதை முன்பு சொன்னது ஞாபகம் வந்தது.

கோதை ஏற்கனவே 108 திவ்விய தேசங்களில் இருக்கிற எல்லா பெருமாளையும் பற்றிச் சொல்லச் சொல்லி, அதில் ஸ்ரீரங்கத்தில் இருக்கிற ரங்கநாதனைத்தான் நான் திருமணம் செய்வேன் என்று ஆணித்தரமாக சொல்லிவிட்டார். எப்படி ஒரு மானிடப் பெண்ணால் ஆண்டவனை திருமணம் செய்ய முடியும். இது எப்படி சாத்தியமாகும் என ஒரே குழப்பத்திலேயே, அன்றைய இரவு பெரியாழ்வார் தூங்கினார். அப்போது விஷ்ணு சித்தராகிய பெரியாழ்வாருடைய கனவில் ரங்கநாதர் தோன்றி, நீ கவலைப்படாதே! நான் உன்னுடைய பெண்ணை ஏற்றுக்கொள்கிறேன். நீ என்ன செய்கிறாய் என்றால் ஆண்டாளை அழைத்துக்கொண்டு திருவரங்கத்துக்கு வந்து விடு...

நான் ஆண்டாளை என்னுடைய துணையாக ஏற்றுக்கொள்வேன் என்று சொல்லி பெரியாழ்வாருக்கு உறுதி அளித்தார்.


அதே மாதிரி பெருமாள் அன்று இரவு பாண்டிய மன்னனுடைய கனவிலும் தோன்றி, நீங்களும் பெரியாழ்வாருக்கு ஆண்டாளை திருவரங்கத்துக்கு அழைத்து வருவதற்கு உதவி பண்ண வேண்டும் என்று ஆணையிட்டார். உடனே பெரியாழ்வார் மனசெல்லாம் பக்தி பரவசம் பெருகியது. ஊர் மக்கள் அனைவரும் மகிழ்ச்சி பொங்க மேள தாளத்தோடு ஆண்டாளை  திருவரங்கம் கோவிலுக்கு அழைத்து வந்தனர்.

திருவரங்கம் வந்த உடன் ரங்கநாதர் பள்ளி கொண்டு இருக்கிற கருவறையை நோக்கி ஆண்டாள் கையில் மாலையை எடுத்துக் கொண்டு போக,

**மாலை சாற்றினாள்**
**கோதை மாலை மாற்றினாள்**
**மாலை சாற்றினாள்**
**கோதை மாலை மாற்றினாள்**
**மாலடைந்து மதிலரங்கன்**
**மாலை அவர்தன் மார்பிலே**
**மாலை சாற்றினாள்**
**கோதை மாலை மாற்றினாள்**
**மாலடைந்து மதிலரங்கன்**
**மாலை அவர்தன் மார்பிலே**
**மையலாய் தையலாள் மாமலர் கரத்தினால்**
**மையலாய் தையலாள் மாமலர் கரத்தினால்**
**மாலை சாற்றினாள்**
**கோதை மாலை மாற்றினாள்**


**ரங்கராஜனை அன்பர் தங்கள் நேசனை**
**ரங்கராஜனை அன்பர் தங்கள் நேசனை**
**ஆசி கூறி பூசுரர்கள் பேசி மிக்க வாழ்த்திட**
**ரங்கராஜனை அன்பர் தங்கள் நேசனை**
**ஆசி கூறி பூசுரர்கள் பேசி மிக்க வாழ்த்திட**
**அன்புடன் இன்பமாய் ஆண்டாள் கரத்தினால்**
**மாலை சாற்றினாள்**
**கோதை மாலை மாற்றினாள்**
**பூ மாலை சாற்றினாள்**
**கோதை மாலை மாற்றினாள்**
**மாலை சாற்றினாள்**
**கோதை மாலை மாற்றினாள்**

என்று பாடி அனைவரும் கோதையை வாழ்த்த, ரங்கநாதரும் ஆண்டாளை அப்படியே ஏற்றுக்கொண்டு அங்கே ஒரு பெரிய ஜோதி எழும்பி அப்படியே ரங்கநாதருடன் கலந்து ஆண்டாள் ஐக்கியமாகி அப்படியே மறைந்துவிட இந்தக் காட்சியை அங்கே இருந்த எல்லா மக்களும் கண்டு களித்தனர்.



பெரியாழ்வாரும் பார்த்து அப்படியே மெய் சிலிர்த்துப் போனார். ஆண்டாள் ரங்கநாதரை கல்யாணம் செய்த மகிழ்ச்சியில் இருந்த பெரியாழ்வாருக்கு, தான் ஆசையாய் வளர்த்த ஒரே பெண்ணும் தன்னை விட்டுப் பிரிந்து போய் விட்டாளே என்ற ஒரு சோகம் மட்டும் அப்படியே மனதில்  இருந்தது. அதை அறிந்த பெருமாளும் உடனே ஆண்டாளுடன்

பெரியாழ்வாருக்குத் தரிசனம் கொடுத்து, விஷ்ணுசித்தா நீ கவலைப்படாதே... நான் எப்பொழுதும் ரங்கமன்னாராக உன்னுடைய ஸ்ரீவில்லிபுத்தூரில் உன் கூடவே இருப்பேன். அதனால் நீ அங்கு போய் எப்பொழுதும் போல எனக்கு மலர் மாலைகளைத் தொடுத்துக் கொடு; நான் அங்கு வந்து உன்னைப் பார்க்கிறேன் என்று ஆறுதல் கூறியதும், பெரியாழ்வாரும் பெருமாளுடைய உத்தரவை ஏற்றுக்கொண்டு திருவில்லிபுத்தூருக்கு வந்து ரங்கமன்னாருக்கு மாலை கட்டிக்கொடுக்கும் சேவையை எப்பொழுதும் போல் பண்ணிக்கொண்டு வந்தார். பிறகு அங்கே இருந்து பிற ஊர்களுக்கு யாத்திரை சென்று பெருமாளுக்கு சேவை புரிந்தார்.



அதன் பிறகு தன்னுடைய கடைசி காலத்தில் மதுரைக்கு பக்கத்தில் இருக்கிற திருமாலிருஞ்சோலை என்கிற அழகர்க் கோவிலுக்கு சென்று அங்கே இருக்கும் பெருமாளுக்கு சேவகம் செய்து தன்னுடைய அந்திம காலத்தில் பெருமாளுடைய திருவடியில் சேர்ந்தார். இப்பொழுதும் திருவில்லிபுத்தூரில் ஆண்டாள் கோவிலில் ஸ்ரீரங்கமன்னாருடைய ஒரு பக்கம் ஆண்டாளும், ஒரு பக்கம் கருடரும் இருப்பார்கள். அந்த கருடர் வேறு யாரும் இல்லை.

சாக்ஷாத் பெரியாழ்வார்தான். அவர் கருடருடைய அம்சம். இந்த கோவிலின் முற்பகுதியில் வடபத்திரசாயி பெருமாள் சயனக் கோலத்தில் இருப்பார். பெரியாழ்வார் ஒரு நந்தவனத்திலிருந்து மலர்களெல்லாம் பறித்து வந்து தொடுத்து மாலையாக தொடுத்தார் இல்லையா, அந்த நந்தவனமும் இன்றைக்கும் அந்த இடத்தில் இருக்கிறது. நமது ஆண்டாள் பெருமாளுக்குக் கட்டின மாலையை தினமும் போட்டுப் போட்டு அழகு பார்த்துக்கொண்ட அந்த கண்ணாடிக்கிணறும் ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலில் இன்றும் இருக்கிறது.

இந்த கோவிலுடைய இன்னொரு சிறப்பு என்னவென்றால் ஆண்டாளுடைய காதலுக்குத் தூது போன அந்த கிளியை நிறைய மலர்களால் செய்து அந்தக் கோவிலில் ஆண்டாளுக்கு வைத்திருப்பார்கள். இந்தக் கிளியை திருமணம் ஆகாத பெண்கள் கோவிலில் இருந்து வாங்கி வந்து தங்கள் வீட்டில் பூஜை செய்து வந்தால் அவர்களுக்கும் சீக்கிரம் திருமணம் ஆகி விடும் என்பது நம்பிக்கை. திருப்பாவை மற்றும் நாச்சியார் திருமொழி ஆகிய இரண்டு பிரபந்தங்களையும் ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் பாடியிருக்கிறார். இதில் திருப்பாவையின் 30 பாசுரங்களையும் நாச்சியார் திருமொழியின் 143 பாசுரங்களையும் மார்கழி மாதத்தில் நாம் தினமும் நம்பிக்கையோடு பாடி, பெருமாள் திருவடிகளை சரணடைந்தால், இந்த உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் நல்லது நடக்கும். ஜீவாத்மா பரமாத்மாவோடு கலந்து பரமபதத்தை அடையும் சரணாகதி தத்துவத்தை விளக்குவது தான் ஸ்ரீ ஆண்டாள் நாச்சியாரின் சரித்திரம். ஆடி மாதம் பூர நட்சத்திரத்தில் பூமாதேவியின் அவதாரமாய் இந்த பூமியில் அவதரித்த ஸ்ரீஆண்டாள் நாச்சியாரின் சரித்திரம் பார்த்தோம்.



**திருவாடிப் பூரத்திற் செகத்துதித்தாள் வாழியே!**
**திருப்பாவை முப்பதுஞ் செப்பினாள் வாழியே!**
**பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே!**
**பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே!**
**ஒருநூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே!**
**உயரரங்கர்க்கே கண்ணியுகந்தளித்தாள் வாழியே!**
**மருவாருந் திருமல்லி வளநாடி வாழியே!**
**வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே!**

**ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்**
**ஸ்ரீ பெரியாழ்வார் திருவடிகளே சரணம்**

பின்குறிப்பு:
இத்தொடரினை கதைசுரபி என்ற எனது யூடியூப்சேனலில், முதல் பகுதி --
https://youtu.be/WMSwM3DPJyk?si=EjOUszPD_8UOmOmZ ;
இரண்டாம்பகுதி --
https://youtu.be/qo2Y3cvXEVU?si=wXTq51D5Bfgek4jy இடம் பெற்றுள்ளது.விருப்பம் உள்ளவர்கள் இந்த காணொளியைக் கண்டு தங்கள் கருத்துக்களை பதிவிடலாம்

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்
t.me/naamnagarathar
Join Telegram

# சிறப்பு மிகு சித்திரை

வருட மலரில் அது மாத இதழ்
தொடர்ந்திடும் இனி நெடிய பகல்



இரு கரங்களை விரிப்பான் கதிரவன்
முழுத் திறனையும் அளிப்பான் பகலவன்

மேனியெங்கும் ஓடும் வியர்வை நதி
மிஞ்சிய நதி இங்கு இதுவே இனி

ஒவ்வொன்றிர்க்கும் ஒவ்வொரு காலம்
பகிர்ந்து கொடுப்பது இறைவனின் வேதம்

அவன் காலத்தை கச்சிதமாய் பிரித்தான்
மனிதருக்குள் ஏற்றத்தாழ்வை விதைத்தான்

கோடையிலே கொட்டித் தீர்க்கும் கோடை மழை
கோடை மழையால் வெட்கி மூடும் வெயிலின் இமை

பேதங்கள் ஏதுமின்றி நன்மைகள் தொடரட்டும்
சிறப்பு மிகு சித்திரையாய் சிறந்தே விளங்கட்டும்

சிந்திய வார்த்தைகள் வாழ்த்துகளைத் தெளிக்கட்டும்
சிந்தனைத் தேரில் சிறகுகள் முளைக்கட்டும்.



– கவிஞர் எம்.சோலை.
காரைக்குடி

# கோடை காலத்தில் குழந்தைகளின் உடல்நலனை பாதுகாப்பதற்கான டிப்ஸ்



ஒவ்வொரு ஆண்டும் வெயிலின் தாக்கம் அதிகரித்துக் கொண்டே தான் உள்ளது. இந்தாண்டும் வெய்யிலின் தாக்கம் அதிகளவில் இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. கோடைக்காலத்தில் குழத்தைகளைப் பராமரிப் பதுதான் சவால், பெரியவர்களே வெம்மையால் வெதும்பிவிடும் நிலையில் குழந்தைகள் மீது கூடுதல் சுவனம் செலுத்தவேண்டியிருக்கும். வெயில் காலத்தில் நீர்ச்சத்து இழப்பால் குழந்தைகள் பாதிப்புக்குள்ளாவார்கள்.





கோடையில் வீட்டில் தயாரித்த உணவுகளையே சாப்பிடக் கொடுங்கள். குழந்தைகளுக் கான உணவுகளை வீட்டில் தயாரிக்கும்போது அதிக அளவில் காய்கறிகள், பழங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக, வெள்ளரிக்காயை அதிக அளவில் உணவில் சேர்த் துக்கொள்ளவேண்டும். வெள்ளரிக்காயில் 96 சதவிகிதம் வரை நீர்ச்சத்து உள்ளது. கேரட், பீட்ரூட், பூசணிக்காய் போன்ற காய்கறிகளிலும் குழந்தைகளைக் கவரும் வகையில் விதவிதமான உணவுகளைச் செய்துகொடுக்கலாம்.



பழங்களில், 95 சதவீதம் நீர்ச்சத்துள்ள தர்பூசணியை வெயில் நேரங்களில் குழந்தைகளுக்கு சாப்பிடக் கொடுக்கலாம். இதுதவிர, கிர்ணி, ஸ்ட்ராபெர்ரி, பீச், வாழைப்பழம், ஆப்பிள், ஆப்ரிகாட், நுங்கு போன்ற பழங்களையும் குழந்தைகளுக்கு ஆதிகம் சாப்பிடக் கொடுகவேண்டும். பகல் பொழுதுகளில் பிரெஷ் ஷாக வெட்டிய இளநீரை குடிக்கக் கொடுக்க லாம். தயிரை உணவில் சேர்த்தோ, மோராசுக் கடைந்தோ, சிறிது சர்க்கரை சேர்த்து லஸ்ஸியாகவோ கொடுக்கலாம்.



கோடையில் அதிகம் வியர்க்கும். அதனால் நோய்த்தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் அதிகம். அதனால் குழந்தைகளை நன்றாகக் குளிக்கவைக்க வேண்டும். ஒரு நாளைக்கு இரண்டு முறை குளிப்பது நல்லது. வாரத்துக்கு ஒன்று அல்லது இரண்டு முறை தலைக்கு குளிக்கலாம். குழந்தைகள் ஒவ்வொரு முறை வெளியில் சென்று விளையாடிவிட்டுவரும்போதும், கழிவறைக்குச் சென்றுவந்தபிறகும். சாப்பிடுவதற்கு முன்பும் கை கழுவும் பழக்கத்தைப் பின் பற்றவேண்டும்.



குழந்தைகள், பெரியவர்கள் யாராக இருந்தாலும் தண்ணீர் அதிகமாகக் குடிக்கவேண்டும். பிறந்து ஆறுமாதங்களுக்கு மேல் ஆன குழந்தைகளுக்கு தண்ணீர் கொடுக்கலாம். குறிப்பாக, மே மாதத்தில் ஆறு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு இரண்டு முறை பால்கொடுத்தால் நடுவில் ஒருமுறை தண்ணீர் கொடுக்க வேண்டும். கேன் தண்ணீர், சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் என எதுவாக இருந்தாலும் அதைக் கட்டாயம் கொதிக்கவைத்துத்தான் கொடுக்க வேண்டும். கொதித்து ஆற வைத்த தண்ணீரை டம்ளரில் ஊற்றி, சிறிய ஸ்பூன் வைத்து குழந் தைகளுக்கு ஊட்டலாம். பாட்டிலில் ஊற்றி குழந்தைக்குத் தண்ணீர் கொடுப்பதைத் தவிர்க்கவும்.



விடுமுறை நேரமான கோடைக்காலத்தில் இரவு தாமதித்து உறங்குவது, காலையில் அதிக நேரம் உறங்குவது. நேரம் தவறி சாப்பிடுவது என அவர்களின் ஒட்டுமொத்த நேர அட்டவணையும் பாதிக்கப்படும். விடுமுறை நேரங்களிலும் குழந்தைகளை நேர அட்டவணையைச் சரியாகப் பின்பற்றச்செய்ய வேண்டும். குழந்தைகளின் உணவு, உறக்கம் ஆகியவை பாதிக் காத வகையில் ஓர் அட்டவணையைப் பின்பற்ற பழக்குவது அவசியம்.



# செட்டிநாட்டு சித்திரகுப்தநாயனார் பூசை

–இராம.நா.இராமநாதன் – ஆ.தெக்கூர்



நகரத்தார் மகளிர் கடைபிடிக்கும் வழிபாட்டு முறைகளில் ஒன்று சித்திரகுப்த நாயனார் பூசை. இந்த பூசையானது முன்பு நமது ஆச்சிமார்கள் மத்தியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வழிபாட்டு முறையாக இருந்து வந்துள்ளது. தற்போது இந்த வழிபாட்டு முறையானது நேரமின்னை மற்றும் நகர வாழ்க்கைச் சூழல் காரணமாக பலரும் கடைபிடிப்பது கிடையாது. இருப்பினும் சிலர் இன்றும் இந்த வழிபாட்டு முறையை தவறாது கடைப்பிடித்து வருகின்றனர். நகரத்தார் வாழ்வியலில் சிறப்பு வாய்ந்த வழிபாட்டு முறையை வரும் மற்றும் வளரும் இன்றைய தலைமுறையினர் அறியும் வகையில் அமைவதே இக்கட்டுரையின் நோக்கம்.

## பூசைக்கான நாளும் காரணமும் :



சித்தரகுப்த நாயனார் பூசையானது சித்திரை மாதத்தில் வரும் சித்திரை நட்சத்திரமும் முழுநிலவும் கூடும் நாளில் சித்திரகுப்த நாயனாரை நினைந்து பகல்பொழுதில் எதுவும் உண்ணாது நோன்பு இருந்து மாலையில் வழிபடுவர். இந்த நோன்பின் நோக்கம் நமது வாழ்வில் புண்ணியங்கள் அதிகம் செய்திடவும், பாவங்கள் செய்யதிடாமல் இருக்கவும் , செய்த பாவங்களில் இருந்து விடுபட பாவ புண்ணிய கணக்கு எழுதும் சித்திரகுப்த நாயனாரை தோன்றிய சித்திரை முழுநிலவு நாளில் அவரை நினைத்து இந்த வழிபாடானதுகடைபிடிக்கப்படுகின்றது.

## நகரத்தார் வாழ்வியலில் சித்திர குப்த நாயனார் பூஜை :



முன்பு நகரத்தார்கள் திருமணத்தில் பெண்ணுக்கு வைக்கும் சாமான்களில் வெள்ளி மற்றும் வெண்கலத்தில் இந்த வழிபாட்டு பொருட்களான நிறைகுடத்திற்கான கலசம், தேங்காய், மாவிலை, ஏடு எழுத்தாணி, பாவர்னக் கிண்ணம் ( சிறிய 16 கிண்ணங்கள் )

குலையுடன் கூடிய மாங்காய் வெற்றிலை பாக்கு போன்ற பொருட்களையும் செய்து வைப்பர் சற்று வசதிபடைத்தவர்கள் வெள்ளியிலும், வெண்கலத்திலும் செய்து வைப்பர். முன்பு திருமணத்தில் பெண்ணுக்கு வைக்கு வெள்ளிச் சாமான்களில் ஏடு எழுத்தாணி கட்டாயம் இடம்பெற்று இருக்கும்.

## பூஜையின் நடைமுறை :




இந்த நோன்பானது இரண்டு விதமாக கடைபிடிக்கப்பட்டு வந்தது. அதில் ஒரு விதம் பாவர்னக் கிண்ணத்தில் (16 சிறிய கிண்ணங்கள்) நவதானியங்கள், பஞ்சு, உப்பு, புளி மிளகாய், தட்டைப்பயறு, அரிசி போன்றவற்றை எடுத்து வைத்தும் சில இடங்களில் பாவவர்ன கிண்ணத்தை சுலகின் மேல் வைத்தும் வழிபடுவர்.

மற்றொரு வகை இந்த பாவவர்ன கிண்ணத்த்தில் தானியங்கள் எதுவும் வைக்காது வழிபடுவதும் என்பது ஒருவகையான வழிபாட்டு முறை. தானியங்கள் வைப்பது மட்டுமே மாறுபடும் மற்றபடி இம்முறைகள் எல்லாம் ஒன்றாகவே அமைந்திருக்கும்.

சித்திரகுப்த நாயனார் வழிபாடானது பெரும்பாலும் மாலையில் விளக்கு ஏற்றிவைத்து நடுவிட்டுக் கோலமிட்டு ஒரு மனையிட்டு சித்திரகுப்பதர் உருவம் வரையத் தெரிந்தவர்கள் பச்சரி மாவில் வரைந்து வைத்தும் அல்லது மனைப்பலகையில் ஏடு எழுத்தாணி வைத்து மலர்சரங்கள் கொண்டு அலங்கரித்து உப்பு மற்றும் இனிப்பு கொழுக்கட்டை, பாயசம், பொங்கல், மாவிளக்கு, நீர்மோர், பானகம், வெள்ளரிக்காய், கொத்தோடு மாங்காய், குலையுடன் தேங்காய் மற்றும் நுங்கு, முக்கனிகள், மற்றும் தாம்பூலம் வைத்து இயன்ற பலகாரங்கள் ( தேன் குழல், அதிரசம், சீடை, சீப்புசீடை, பணியாரம், வடை பொன்றவை ) செய்து வைத்து சித்திரகுப்த நாயனார் கதையை குடும்பமாய் அமர்ந்து படித்து முடித்தபின் வெண் சங்கு முழங்கி நிவேதனம் செய்து தீபாரதனை கண்டபின் அன்றைய இரவு முழு நிலவின் உதயத்தை கண்டு வழிபட்டதுடன் நோன்பானது நிறைவு பெறும். அன்றைய தினம் வீட்டு உணவில் தட்டைபயறு, எருமைப்பால் அல்லது எருமைத்தயிர் சேர்த்து கொள்வது ஒரு மரபு. சித்திரகுப்த நாயனார் கதையை அன்றைய தினம் கேட்டாலே புண்ணியம் பாவங்கள் குறையும் என்ற நம்பிக்கையும் உள்ளது.

இந்தவருடம் சித்ரா பௌர்ணமி வரும் மே 12.05.2025 அன்று வருகிறது. இந்நாளில் நாம் அனைவரும் சித்திரகுப்த நாயனாரை வழிபடுவதோடு, வளரும் இன்றைய தலைமுறையினருக்கு நம் மண்ணின் இவ்வழிபாட்டினை நினைவு கூர்ந்து அனைவரையும் வளம் பெற செய்வோம்.




# சர்க்கரை வள்ளி
# கிழங்கு அல்வா



## தேவையான பொருட்கள்:

சர்க்கரை வள்ளி கிழங்கு – மூன்று
நாட்டு சர்க்கரை – ஒரு கப்
ஏலக்காய் பவுடர் – ஒரு டீஸ்பூன்
முந்திரி பருப்பு – 15
நெய் – கால் கப்

## செய்முறை

- சர்க்கரை வள்ளி கிழங்கை 15 நிமிடம் நன்கு வேக வைத்து, தோல் உரித்து விடவும். அதை மிக்சியில் போட்டு அரைத்து எடுக்கவும். ஒரு வாணலியில் நாட்டு சர்க்கரை போட்டு, கால் டம்ளர் தண்ணீர் சேர்த்து கரைத்து, மிதமான சூட்டில் அடுப்பில் வைக்கவும்.

- மிக்சியில் அரைத்து எடுத்து வைத்திருந்த சர்க்கரை வள்ளி கிழங்கு விழுதை, வாணலியில் போட்டு, அதனுடன் ஏலக்காய் பவுடர் சேர்த்து நன்றாக கலந்த பின், நெய் ஊற்றி அடுப்பில் கிளறிக் கொண்டே இருக்க வேண்டும்

- இன்னொரு வாணலியில் நெய் சேர்த்து முந்திரி பருப்பை வறுத்து, அதையும் சர்க்கரைவள்ளி கிழங்கு விழுதுடன் சேர்க் கவும். நெய் தனியாக பிரிந்து வரும் வரை நன் றாக கிளறி வேக வைத்து இறக்கினால், சுவையான சர்க்கரை வள்ளி கிழங்கு அல்வா தயார்.

- உங்கள் வீட்டில் கண்டிப்பாக ஒருமுறை இந்த அல்வாவை செய்து பாருங்கள். வீட்டில் உள்ள அனைவரும் கண்டிப்பாக விரும்பி சாப்பிடுவர்.

- குறிப்பாக இனிப்பு அதிகம் சாப்பிடும் குழந்தைகள், இந்த அல்வாவை 'என்ஜாய்' செய்து சாப்பிடுவர்.

கட்டுரையாக்கம்:
உமாராணி சொக்கலிங்கம்.
நற்சாந்துபட்டி ஈரோடு.






இந்தப் பகுதியில் நா ஊறும் நகரத்தார் ரெசிபிகளுடன், நம் ஆச்சிகளின் கைப்பக்குவ உணவு வகைகளின் செய்முறையினை அறியலாம். வாசகர்கள் தங்கள் ரெசிப்பிகள் இந்தப் பகுதியில் இடம் பெற செய்ய தங்களின் படைப்புகளை தங்களது விவரங்களுடன் naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் அல்லது 9791776534 என்ற எண்ணிற்கு வாட்சப் செய்யவும்

# NAGARATHAAR KAPITAL

(Will learn and earn together in wealth creating Journey)

## Webinar Course.

I. Stock Market Course (Beginners).
Basics, Fundamentals, Technical (Introduction).

II. Stock Market Course (Advanced).
Technical, Strategies.

## Why One Wealth Course?

Learn from Qualified and Experienced Expert Panelists.
Your search for in-depth Knowledge ends here.
You will become a Professional trader and Informed Investor.
Assist to Develops investment strategies to achieving financial goals
Got Learn about Different Market.
Personalized financial advice.

## Who can join?

I. Students.

II. Professionals from other sectors who want to become Part time and Full time Trader.

III. Professionals from other sectors who want to formulate their Portfolio. House Wife.

IV. Anyone who wants to make a career in Equity / Commodity / Currency Trading / to become Investment Advisor / to become Financial Advisors.

Our "Young Generation" can learn and start doing analysis to identify potential stocks @ Correct Entry / Correct Exit to win the Trade and by Investing in turn around stocks to create wealth by their own in reasonable period of time.

**Webinar Dates** Every month will post it on our NAGARATHAAR KAPITAL Forum
For April 2025 Class will be on 19th (SATURDAY).

**Webinar Timings** India Time: 17:30Hrs - 18.30Hrs / 21.00 - 22.00Hrs, On Week days & 17.00Hrs - 18.00Hrs / 20.00 - 21.00Hrs Week Ends.

# For further Details Contact: +91-9790755337 +91-9884072224

nagarathar.capital@gmail.com

# பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்...



நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் நிபுணர்கள் எழுதும் இந்த தொடரில் பங்குசந்தை தொடர்பான அடிப்படைகளையும், ஒவ்வொரு மாதமும் ஒரு நிறுவனம் குறித்த பகுப்பாய்வினையையும், குறுகிய கால பங்குகளுக்கான பரிந்துரைகளையும் பார்க்கலாம்.

**இந்த இதழில் ஒரு நிறுவனத்தை பற்றிய விரிவான பகுத்தாய்வு.**

கார்த்திக் முத்தப்பன் ( கண்டனூர் ) நகரத்தார் கேப்பிட்டல் – சென்னை

Welspun ENTERPRISES

Great Place To Work. Certified FEB 2024-FEB 2025 INDIA

**இந்நிறுவனத்தைப் பற்றி:**
**WELSPUN ENTERPRISES LIMITED (532553/WELENT)**

WELSPUN ENTERPRISES LIMITED, ஒரு வித்தியாசமான உள் கட்டமைப்பு மேம்பாட்டாளரான வெல்ஸ்பன் எண்டர்பிரைசஸ் லிமிடெட் (WEL), அத்தியாவசிய சாலை மற்றும் நீர் சொத்துக்களுடன் இந்தியாவை மேம்படுத்துவதிலும், பல்வேறு பங்குதாரர்களுக்கு மதிப்பை உருவாக்குவதிலும் முன்னணியில் உள்ளது. வலுவான இருப்புநிலைக் குறிப்பு, நல்ல கடன் மதிப்பீடுகள் மற்றும் சொத்து–ஒளி உத்தியுடன், WEL அதிக மதிப்பு கூட்டப்பட்ட திட்ட நிர்வாகத்தில் கவனம் செலுத்துகிறது, அதன் திட்டங்களின் தரம், பாதுகாப்பு மற்றும் சரியான நேரத்தில் மற்றும் பட்ஜெட்டுக்குள் முடிப்பதை உறுதி செய்கிறது.

வெல்ஸ்பன் எண்டர்பிரைசஸ் என்பது இந்தியாவின் முன்னணி உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனமாகும், இது முதன்மையாக சாலைகள், நெடுஞ்சாலைகள் மற்றும் நீர் சுத்திகரிப்பு திட்டங்களின் கட்டுமானத்தில் ஈடுபட்டுள்ளது. 1976 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த நிறுவனம், MSK ப்ராஜெக்ட்ஸ் (இந்தியா) லிமிடெட் என்பதிலிருந்து வெல்ஸ்பன் ப்ராஜெக்ட்ஸ் லிமிடெட் என்றும், இறுதியில் 2014 ஆம் ஆண்டு வெல்ஸ்பன் எண்டர்பிரைசஸ் லிமிடெட் என்றும் பெயர் மாற்றப்பட்டது உட்பட பல மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளது.

இந்த நிறுவனம் "WELSPUN GROUP" என்ற நன்கு அறியப்பட்ட வணிகக் குழுவின் ஒரு பகுதியாகும். வெல்ஸ்பன் குழுமம் இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் உலகளாவிய கூட்டு நிறுவனங்களில் ஒன்றாகும், இது உலகம் முழுவதும் வீடு மற்றும் மேம்பட்ட ஜவுளி, உள்கட்டமைப்பு, எண்ணெய் & எரிவாயு, கிடங்கு, எஃகு, சில்லறை விற்பனை, லைன் குழாய்கள் மற்றும் தரைவழி தீர்வுகள் ஆகியவற்றில் ஆதிக்கம் செலுத்துகிறது.

வெல்ஸ்பன் எண்டர்பிரைசஸ் லிமிடெட், மதிப்புமிக்க டெல்லி–மீரட் விரைவுச் சாலைத் திட்டத்தை 11 மாதங்களுக்கு முன்னதாகவே வெற்றிகரமாக முடித்து, தற்போது கங்கை நதியின் மீது மிகவும் அகலமான எக்ஸ்ட்ராடோஸ் பாலத்தை கட்டி வருகிறது. 2022 ஆம் ஆண்டில் ஒரு மைல்கல் ஒப்பந்தத்தில், நிறுவனம் அதன் முடிக்கப்பட்ட ஆறு சாலை சொத்துக்களை ரூ. 9,000 கோடிக்கு மேல் பணமாக்கியது, இது எங்கள் பங்குதாரர்களுக்கு நிலையான மதிப்பு–பெருக்க வளர்ச்சியை உருவாக்கும் இலக்கை அடையும்.

நீர் மற்றும் கழிவுநீர் துறையில், நிறுவனம் மூன்று முக்கிய திட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது: இந்திய அரசாங்கத்தின் ஜல் ஜீவன் மிஷனின் ஒரு பகுதியாக உத்தரபிரதேசத்தில் 6.5 லட்சம் வீடுகளுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட கிராமப்புற நீர் வழங்கல் முயற்சி; இந்தியாவின் முதல் பல மாடி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமாக குறிப்பிடத்தக்க மும்பையின் தாராவியில் 418 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சுத்திகரிப்பு வசதி; மற்றும் உலகின் மிகப்பெரிய கொள்ளளவு கொண்ட நிறுவனங்களில் ஒன்றான மும்பையில் உள்ள பாண்டுப் வளாகத்தில் 2,000 மில்லியன் லிட்டர் நீர் சுத்திகரிப்பு நிலையம்.

2023 ஆம் ஆண்டில், நகர்ப்புற நீர் உள்கட்டமைப்பு பிரிவில் அகழி இல்லாத தொழில்நுட்பம் சார்ந்த EPC நிறுவனமான வெல்ஸ்பன் மிச்சிகன் இன்ஜினியர்ஸ் லிமிடெட் (முன்னர் மிச்சிகன் இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது) இல் 50.1% பங்குகளை WEL வாங்கியது, இது இந்தியா முழுவதும் மைக்ரோ டனலிங், பிரிவு டனலிங், கழிவுநீர் நெட்வொர்க் மறுவாழ்வு மற்றும் பிற அகழி இல்லாத தொழில்நுட்பங்களின் முக்கிய மற்றும் நம்பிக்கைக்குரிய பகுதிகளுக்கு விரிவடையும்.

எரிவாயு அடிப்படையிலான பொருளாதாரத்தை நோக்கி மாறுவதற்கான அரசாங்கத்தின் நோக்கத்திற்கு ஏற்ப, அதானி வெல்ஸ்பன் எக்ஸ்ப்ளோரேஷன் லிமிடெட் (AWEL) என்ற கூட்டு முயற்சி நிறுவனம் மூலம் அப்ஸ்ட்ரீம் எண்ணெய் மற்றும் எரிவாயு வணிகத்திலும் WEL முதலீடுகளைக் கொண்டுள்ளது.

**வணிகப் பிரிவுகள்:**

1) உள்கட்டமைப்பு: சாலைகள், நெடுஞ்சாலைகள் மற்றும் நகர்ப்புற உள்கட்டமைப்பில் பொது–தனியார் கூட்டாண்மை (PPP) திட்டங்களை உருவாக்கி இயக்குகிறது.

2) எண்ணெய் மற்றும் எரிவாயு: அதானி வெல்ஸ்பன் எக்ஸ்ப்ளோரேஷன் லிமிடெட் உடன் கூட்டு முயற்சி மூலம் எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வில் ஈடுபட்டுள்ளது.

**நிறுவனத்தின் சில முக்கிய திட்டங்கள்:**

1) டெல்லி–மீரட் விரைவுச்சாலை (தொகுப்பு I): 2018 இல் கட்டி முடிக்கப்பட்டது, இந்தியாவின் முதல் 14–வழி விரைவுச்சாலை.

2) கிராமப்புற நீர் வழங்கல் திட்டம்: தற்போது உத்தரபிரதேசத்தில் ஜல் ஜீவன் மிஷனின் கீழ் 2500 கிராமங்களை உள்ளடக்கிய ஒரு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

3) நீர் சுத்திகரிப்பு நிலையம்: மும்பையில் 2000 மில்லியன் லிட்டர் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை வடிவமைத்து, கட்டமைத்து, இயக்கும் பணியைப் பெற்றது.

**நிதி மேலான்மை – சந்தை மூலதனம்:**

$770 மில்லியன் (மார்ச் 20, 2025 நிலவரப்படி) வருவாய்: $399 மில்லியன் (கடந்த பன்னிரண்டு மாதங்கள் நிலையில்)

ஊழியர்கள்: 1,260.

வெல்ஸ்பன் எண்டர்பிரைசஸ் தனது வணிகத்தையும் நிபுணத்துவத்தையும் விரிவுபடுத்த கூட்டு முயற்சிகளை உருவாக்கியுள்ளது.

**அதன் குறிப்பிடத்தக்க கூட்டு முயற்சிகளில் சில இங்கே:**

1) அதானி வெல்ஸ்பன் எக்ஸ்ப்ளோரேஷன் லிமிடெட் (AWEL): எண்ணெய் மற்றும் எரிவாயு வாய்ப்புகளை ஆராய்வதற்காக அதானி குழுமத்துடன் ஒரு கூட்டு முயற்சி.

2) BUL MSK உள்கட்டமைப்பு: டான்ட் அப்தா கர்படா மற்றும் கோன் சாவ்லே சாலை திட்டத்திற்கான சுங்க வசூலை நிர்வகிக்க BUL உடன் ஒரு கூட்டு முயற்சி.

3) லைட்டன் வெல்ஸ்பன் கான்ட்ராக்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் (LWIN): வெல்ஸ்பன் ப்ராஜெக்ட்ஸின் EPC வணிகத்தை, அதன் நீர் வணிகம் மற்றும் பிற EPC ஒப்பந்தங்கள் உட்பட, மாற்றுவதற்காக லைட்டன் கான்ட்ராக்டர்ஸுடன் ஒரு கூட்டு முயற்சி.

பல்வேறு துறைகளில் பல முக்கிய வாடிக்கையாளர்களுடன் நிறுவனம் ஒத்துழைத்தது, குறிப்பிடத்தக்க சில பெயர்களில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (N H A I), பிரஹன்மும்பை முனிசிபல் கார்ப்பரேஷன் லிமிடெட் (BMC), மகாராஷ்டிரா மாநில சாலை மேம்பாட்டுக் கழகம், இந்திய எண்ணெய் கழகம், அதானி குழுமம், எஸ்ஸல் குழுமம், ஆக்டிஸ் போன்றவை அடங்கும்.

ஒட்டுமொத்தமாக வெல்ஸ்பன் எண்டர்பிரைசஸ் இந்தியாவின் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் துறையில் ஒரு முக்கிய வீரராக தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது, தனியார்–தனியார் பங்களிப்பு திட்டங்களில் வலுவான கவனம் செலுத்துகிறது மற்றும் எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வுப் பிரிவில் வளர்ந்து வரும் இருப்பைக் கொண்டுள்ளது.

## அடிப்படைக் கண்ணோட்டம்:

21.51 ஒருங்கிணைந்த EPS (2024–12 இல் முடிவடைந்த பன்னிரண்டு மாதங்கள் பின்தங்கிய நிலையில்) கொண்ட நிறுவனம், தொழில்துறை PE 66.74 உடன் ஒப்பிடும் போது ஒருங்கிணைந்த PE விகிதம் 23.21. முக மதிப்பு 10.

சமீபத்திய தரவுகளின்படி, விளம்பரதாரர் 54.80% பங்குகளை வைத்திருக்கிறார்

## நிறுவனத்தின் அடிப்படை விவரங்கள்:

**Welspun Ent Share Price Insights** VIEW ALL

Employee & Interest Expense

Company has spent 3.82% of its operating revenues towards interest expenses and 6.02% towards employee cost in the year ending Mar 31, 2024. (Source: Consolidated Financials)

Stock Returns vs Nifty Midcap 100

Stock Returns vs Nifty Infrastructure

Welspun Ent Share Price Update

**Key Metrics**

| | |
|---|---|
| PE Ratio (x)<br>22.46 | EPS - TTM (₹)<br>21.51 |
| MCap (₹ Cr.)<br>6,687.46 | Sectoral MCap Rank<br>5 |
| PB Ratio (x)<br>2.81 | Div Yield (%)<br>0.62 |
| Face Value (₹)<br>10.00 | Beta<br>2.57 |
| VWAP (₹)<br>491.56 | 52W H/L (₹)<br>655.00 / 299.60 |

**Welspun Ent Share Price Returns**

| | |
|---|---|
| 1 Day | ↓-4.54% |
| 1 Week | ↓-6.94% |
| 1 Month | ↑15.75% |
| 3 Months | ↓-21.36% |
| 1 Year | ↑58.88% |
| 3 Years | ↑561.85% |
| 5 Years | ↑1115.47% |

Welspun Ent share price insights
Employee & Interest Expense
Company has spent 3.82% of its operating revenues towards interest expenses and 6.02% towards employee cost in the year ending Mar 31, 2024. (Source: Consolidated Financials)

Stock Returns vs Nifty Midcap 100
Stock gave a 3 year return of 561.85% as compared to Nifty Midcap 100 which gave a return of 76.1%.
(as of last trading session)

## Stock Returns vs Nifty Infrastructure

Stock generated 561.85% return as compared to Nifty Infrastructure which gave investors 69.79% return over 3 year time period. (as of last trading session)

## Welspun Ent Share Price Update

Welspun Enterprises Ltd. share price moved down by -4.54% from its previous close of Rs 506.10. Welspun Enterprises Ltd. stock last traded price is 483.15

## நிறுவனத்தின் நிதி நிலை:

### Welspun Ent Financials

Income (P&L) | Balance Sheet | Cash Flow | Ratios — CONSOLIDATED

**INSIGHTS**

**Employee & Interest Expense**

Company has spent 3.82% of its operating revenues towards interest expenses and 6.02% towards employee cost in the year ending Mar 31, 2024. (Source: Consolidated Financials)

| QUARTERLY \| ANNUAL | DEC 2024 | SEP 2024 | JUN 2024 | MAR 2024 | DEC 2023 |
|---|---|---|---|---|---|
| Total Income | 918.96 | 837.92 | 959.76 | 866.70 | 753.92 |
| Total Income Growth (%) | ↑9.67 | ↓-12.69 | ↑10.74 | ↑14.96 | ↑8.85 |
| Total Expenses | 752.37 | 702.05 | 775.67 | 719.05 | 589.73 |
| Total Expenses Growth (%) | ↑7.17 | ↓-9.49 | ↑7.87 | ↑21.93 | ↑3.65 |
| EBIT | 166.59 | 135.87 | 184.09 | 147.65 | 164.19 |
| EBIT Growth (%) | ↑22.61 | ↓-26.19 | ↑24.68 | ↓-10.07 | ↑32.75 |
| Profit after Tax (PAT) | 71.49 | 58.51 | 98.02 | 69.73 | 71.55 |
| PAT Growth (%) | ↑22.18 | ↓-40.31 | ↑40.57 | ↓-2.54 | ↑15.35 |
| EBIT Margin (%) | 18.13 | 16.22 | 19.18 | 17.04 | 21.78 |
| Net Profit Margin (%) | 7.78 | 6.98 | 10.21 | 8.05 | 9.49 |
| Basic EPS (₹) | 5.21 | 4.29 | 7.18 | 5.12 | 5.24 |

### Welspun Ent Financials

Income (P&L) | Balance Sheet | Cash Flow | Ratios — CONSOLIDATED

| ANNUAL | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 |
|---|---|---|---|---|---|
| Total Assets | 4,948.73 | 5,106.17 | 5,894.60 | 4,788.48 | 3,116.30 |
| Total Assets Growth (%) | ↓-3.08 | ↓-13.38 | ↑23.10 | ↑53.66 | ↑7.72 |
| Total Liabilities | 2,458.55 | 2,744.19 | 4,100.84 | 3,102.72 | 1,536.75 |
| Total Liabilities Growth (%) | ↓-10.41 | ↓-33.08 | ↑32.17 | ↑101.90 | ↑6.77 |
| Total Equity | 2,490.18 | 2,361.98 | 1,793.76 | 1,685.76 | 1,579.55 |
| Total Equity Growth (%) | ↑5.43 | ↑31.68 | ↑6.41 | ↑6.72 | ↑8.66 |
| Current Ratio (x) | 2.03 | 1.90 | 1.06 | 1.31 | 1.39 |
| Total Debt to Equity (x) | 0.32 | 0.32 | 1.40 | 1.27 | 0.48 |
| Contingent Liabilities | 269.79 | 651.80 | 1,143.78 | 1,000.88 | 1,130.75 |

## Welspun Ent Financials

Income (P&L) | Balance Sheet | **Cash Flow** | Ratios — CONSOLIDATED

| ANNUAL | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 |
|---|---|---|---|---|---|
| Net Cash flow from Operating Activities | -344.47 | 344.67 | 287.07 | 8.74 | -57.93 |
| Net Cash used in Investing Activities | -51.55 | 1,288.60 | -487.06 | -917.52 | -62.06 |
| Net Cash flow from Financing Activities | -486.31 | -203.68 | 124.66 | 753.06 | 105.94 |
| Net Cash Flow | -875.78 | 1,429.59 | -75.33 | -155.72 | -1.53 |
| Closing Cash & Cash Equivalent | 723.64 | 1,599.42 | 261.64 | 336.97 | 492.69 |
| Closing Cash & Cash Equivalent Growth (%) | ↓-54.76 | ↑511.31 | ↓-22.36 | ↓-31.61 | ↓-0.31 |
| Total Debt/ CFO (x) | -2.18 | 2.19 | 8.76 | 244.98 | -13.02 |

## Welspun Ent Financials

Income (P&L) | Balance Sheet | Cash Flow | **Ratios** — CONSOLIDATED

| ANNUAL | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 |
|---|---|---|---|---|---|
| Return on Equity (%) | 12.70 | 30.67 | 6.96 | 7.65 | 9.42 |
| Return on Capital Employed (%) | 17.50 | 12.32 | 7.05 | 7.87 | 14.29 |
| Return on Assets (%) | 5.96 | 14.15 | 2.11 | 2.69 | 4.77 |
| Interest Coverage Ratio (x) | 5.61 | 3.29 | 2.30 | 2.69 | 3.86 |
| Asset Turnover Ratio (x) | 0.57 | 0.50 | 0.32 | 31.94 | 58.00 |
| Price to Earnings (x) | 14.12 | 2.61 | 8.76 | 12.61 | 4.08 |
| Price to Book (x) | 1.79 | 0.80 | 0.61 | 0.97 | 0.38 |
| EV/EBITDA (x) | 7.46 | 5.38 | 10.33 | 11.34 | 3.77 |
| EBITDA Margin (%) | 21.46 | 14.17 | 23.01 | 20.49 | 17.78 |

## மேம்பட்ட விளக்கப்படம்:

### Welspun Ent Technicals

Buy / Sell Signals | Price Analysis | Pivot Levels & ATR | **Chart**



# சகநிறுவன ஒப்பீடு:

## Welspun Ent Peer Comparison

Welspun Ent Stock Performance | Ratio Performance | CHART

**INSIGHTS**

**Stock Returns vs Nifty Midcap 100**


Stock gave a 3 year return of 561.85% as compared to Nifty Midcap 100 which gave a return of 76.1%. (as of last trading session)

**Stock Returns vs Nifty Infrastructure**

Stock generated 561.85% return as compared to Nifty Infrastructure which gave investors 69.79% return over 3 year time period. (as of last trading session)

Welspun Ent | HG Infra Engg | PNC Infratech | KNR Constructions | Search by Stock

1D 1W 1M 3M 6M 1Y 5Y




## Welspun Ent Peer Comparison

Welspun Ent Stock Performance | Ratio Performance | SEE ALL PARAMETERS

**INSIGHTS**

**Stock Returns vs Nifty Midcap 100**

Stock gave a 3 year return of 561.85% as compared to Nifty Midcap 100 which gave a return of 76.1%. (as of last trading session)

**Stock Returns vs Nifty Infrastructure**

Stock generated 561.85% return as compared to Nifty Infrastructure which gave investors 69.79% return over 3 year time period. (as of last trading session)

| NAME | | P/E (X) | P/B (X) | ROE % | ROA % | REV CAGR [3YR] | OPM |
|---|---|---|---|---|---|---|---|
| Welspun Ent | | 22.46 | 2.69 | 12.70 | 5.96 | 22.13 | 20.50 |
| HG Infra Engg | X | 12.56 | 2.81 | 21.93 | 9.91 | 26.97 | 17.45 |
| PNC Infratech | X | 5.72 | 1.25 | 17.54 | 5.82 | 13.82 | 22.07 |
| KNR Constructions | X | 5.28 | 1.83 | 21.92 | 13.39 | 15.51 | 23.38 |
| Ashoka Buildcon | X | 3.58 | 2.17 | 22.65 | 2.63 | 24.73 | 21.34 |

Add More

*Annual Ratios (%)*

# ஷேர்ஹோல்டிங் பேட்டர்ன்:

## Welspun Ent Shareholding Pattern

QOQ Change | Total Shareholdings





*Showing Welspun Ent Shareholding as on Dec 2024*

| CATEGORY | DEC 2024 | SEP 2024 | JUN 2024 | MAR 2024 |
|---|---|---|---|---|
| Promoters | 54.80 | 54.51 | 54.51 | 54.51 |
| Pledge | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| FII | 4.58 | 4.71 | 4.69 | 4.55 |
| DII | 3.03 | 1.75 | 1.77 | 1.93 |
| Mutual Funds | 1.52 | 0.09 | 0.07 | 0.06 |
| Others | 37.59 | 39.03 | 39.03 | 39.01 |

## Welspun Ent Shareholding Pattern

QOQ Change | Total Shareholdings




*Showing Shareholding as on Dec 2024*

| CATEGORY | NO. OF SHARES | PERCENTAGE | % CHANGE QOQ |
|---|---|---|---|
| Promoters | 7,58,54,962 | 54.80 % | ↑0.28 |
| Pledge | 0 | 0.00 % | 0.00 |
| FII | 63,47,877 | 4.58 % | ↓-0.13 |
| DII | 42,04,869 | 3.03 % | ↑1.27 |
| MF | 21,07,813 | 1.52 % | ↑1.43 |
| Others | 5,20,06,102 | 37.59 % | ↓-1.43 |

## Welspun Ent MF Ownership

**Quant Small Cap Direct-G**
Equity: Small Cap
5.0 ★

| 280.17 | 1.23% | ↑84.35 |
|---|---|---|
| Amount Invested (in Cr.) | % of AUM | % Change (MoM basis) |

**Motilal Oswal Nifty Microcap 250 Index Direct-G**
Equity: Small Cap

| 6.94 | 0.41% | ↑5.09 |
|---|---|---|
| Amount Invested (in Cr.) | % of AUM | % Change (MoM basis) |

**Groww Nifty Total Market Index Direct-G**
Equity: Flexi Cap

| 0.04 | 0.01% | ↑3.51 |
|---|---|---|
| Amount Invested (in Cr.) | % of AUM | % Change (MoM basis) |

*MF Ownership as on 28 February 2025*

View all Mutual Fund Schemes »

### எமது ஆய்வு பார்வையில்:

நிறுவனம் மிகவும் புகழ்பெற்ற வணிகக் குழுவைச் சேர்ந்தது, ஒட்டுமொத்த அடிப்படைகள் நல்ல நிலையில் & நிதி அளவுருக்கள் நன்கு இருப்பினும் நிறுவனம் பணி மூலதன நாட்களில் வேலை செய்ய வேண்டும், காலப்போக்கில் அது மேம்பட்டால் நிலையான வளர்ச்சிக்கு நல்ல வாய்ப்புகள் உள்ளன. தனிப்பட்ட ஆய்வின்படி, நடுத்தர கால (8 மாதங்கள் முதல் 1.5 ஆண்டுகள் வரை) முதல் நீண்ட கால (2 முதல் 3 ஆண்டுகள் வரை) முதலீட்டிற்கு எனது ஆய்வுக் கண்ணோட்டத்தில் நல்லது. நடுத்தர காலத்தில் 750+ ஐக் காணலாம். நீண்ட காலத்திற்கு 900+ ஐ எனது ஆய்வுக் கண்ணோட்டத்தில் எதிர்பார்க்கிறேன்.

# இந்த இதழில் எமது ஆய்வு பார்வையில் குறுகிய கால பங்குகள் பரிந்துரைகள் :

க.ஹர்ஷவர்த்தினிஸ்ரீ ( நெற்குப்பை ) நகரத்தார்கேப்பிட்டல் – சென்னை

1, **West Coast Paper Mills Ltd (NSE: WSTCSTPAPR)...**
**Entry 420 to 440 . Add More on down till 300.**
**Targets, 550, 600 and 650**

2, **D P Wires Ltd (NSE: DPWIRES)...**
**Entry 200 to 210. Add More on down till 180.**
**Targets 250, 280 and 300**

3, **NRB Bearings Ltd (NSE: NRBBEARING)...**
**Entry 210 to 220. Add More on down till 180.**
**Targets 250, 280 and 300**

4, **Canara Bank Ltd (NSE: CANBK)...**
**Entry 90 to 95. Add More on down till 80.**
**Targets 120, 140 and 160**

5, **Central Depository Services (India) Ltd (NSE: CDSL)...**
**Entry 1200 to 1220. Add More on down till 1000.**
**Targets 1400, 1600 and 1800**

6, **Irm Energy Ltd (NSE: IRMENERGY)...**
**Entry 300 to 310. Add More on down till 260.**
**Targets 350, 400 and 440**

பொறுப்புத் துறப்பு

கட்டுரையாளர் செபியில் பதிவு செய்யப்பட்ட ஆய்வாளர் அல்ல. இடுகையிடப்பட்ட விளக்கங்கள் / நிலைகள் / பங்குகள் பற்றிய தனிப்பட்ட ஆய்வு. இந்தப் பட்டியல் முற்றிலும் ஆய்வுப் பகிர்வுக்காகவே, வாங்கவோ விற்கவோ எந்தப் பரிந்துரையும் இல்லை. தனிநபர் உங்கள் சொந்த விருப்பத்தின்படி முடிவு எடுக்க வேண்டும் யாரேனும் சுயமாக எந்த ஒரு வர்த்தக நடவடிக்கையையும் மேற்கொண்டால், எந்தவிதமான இழப்புகளுக்கும் லாபத்திற்கும் கட்டுரையாளர் / நாம்நகரத்தார் மின்னிதழோ பொறுப்பல்ல..!! இது முற்றிலும் ஒருவரின் சொந்த நடவடிக்கை மற்றும் விருப்பம். எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது.



# வருந்துகிறோம்

செட்டிநாட்டு அரசர் குடும்பத்தின் நம்பிக்கை நட்சத்திரம், தமிழிசைக் காவலர் ராஜாசர் முத்தையா செட்டியார் அவர்களிடம் நீண்ட காலம் மேன்மையாகப் பணியாற்றி பின்னர் செட்டிநாட்டு அரசர் டாக்டர் எம் ஏ எம். இராமசாமி செட்டியார் அவர்கள் பணிகளுக்கு உறுதுணையாக இருந்த பேருள்ளம்.

மேனாள் இந்தியன் வங்கி மேலாளர், அண்மையில் தொண்ணூறாம் ஆண்டு நிறைவு விழா கண்ட செயல் செம்மல் ஆத்தங்குடியைச் சேர்ந்த ஏ ஆர்.இராமசாமி அவர்கள் 04.04.2025 அன்று அதிகாலை தனது 91 ஆவது வயதில் அடையாறு காந்தி நகர் இல்லத்தில் இறைவன் திருவடி அடைந்தார்கள்.



சென்னைப் பெருநகரத்தில் அனைத்துப் பெருமக்களின் பேரன்பைப் பெற்றவர், ராஜா அண்ணாமலைபுரம் அருள்மிகு ஐயப்பன் கோவில் தலைவர், அதன் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவை நான்கு முறை நடத்திய வரலாற்று சிறப்பு மிக்கவர் மற்றும் செட்டிநாட்டு அரசர் குடும்ப மேலாண்மைப் பணிகளில் குறிப்பாக சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சென்னை மற்றும் மதுரை தமிழ் இசைச் சங்கச் செயலாளர் எனப் பல்வேறு பணிகளில் எழுபது ஆண்டுகாலம் முத்திரை பதித்த செயல் செம்மல் .சென்னை காந்தி நகர் எஜுகேஷன் சொசைட்டி டிரஸ்ட் செயலாளர் பணியை நாற்பதாண்டு காலம் மேன்மையுடன் செய்தவர்.

நினைவாற்றல், பல்வேறு பெருமக்களின் நன்மதிப்பு, பரந்து விரிந்த மேலாண்மை நிர்வாகம், கூட்டுக் குடும்ப வாழ்வின் முன்னோடி என முன்மாதிரி மனிதராக வாழ்ந்தவர் ஏ ஆர். இராமசாமி அவர்கள்


## என்றும் அவரது நினைவுகளைக் கருத்தில் கொண்டு :

மனைவி : ஆர்எம். மீனாட்சி

மகன்கள் : டாக்டர் ஆர்எம். ஆறுமுகம் , ஆர்எம். ராஜேந்திரன்,
ஆர்எம். வெங்கடாஜலம்

மகள் : என். வசந்தா நடராஜன் மற்றும் குடும்பத்தினர்.

# குருபெயர்ச்சி– 2025 பலன்கள் எந்த ராசிக்கு யோகம் ?



–ஜோதிடர் எல்லி
9894176494



நாம் நகரத்தார் மின்னிதழில் பயணிக்கும் ஜோதிட ஆர்வலர்களுக்கும், ஜாதக தேடல் மிக்க அன்பர்களுக்கும் நெஞ்சார்ந்த வணக்கம்!

இருட்டில் பயணிப்பவர்களுக்கு விடியல் தான் வரம்! தொடர்ந்து கஷ்டங்களை அனுபவித்து வருகையில் சின்னதாக நிவாரணம் அளிக்கும் வகையில் ஒரு மாற்றம் வேண்டும் தான் இல்லை எனில் வாழ்க்கை கசந்து போகும்!

அது போல சில காலம் நிம்மதியாக கழித்துவந்தவர்களுக்கு திடீரென சிற்சில பிரச்சினைகள், செலவுகள், அலைச்சல், இடமாற்றம் ஏற்படும் போது மனவேதனை உண்டாகிறது.



இதிலிருந்து நாம் அறிவது இன்ப துன்பங்கள் என்பது நிலையற்றது, அது வண்டிச் சக்கரம் போல் சுழல்கிறது. நடப்பவைகளை நிதானித்து ஏற்றுக் கொண்டு அதற்கு தகுந்தாற்போல் தத்தமது வாழ்வியலை உருவாக்கி கொள்பவர்களுக்கு துன்பமில்லை!

அனைவரும் எதிர்பார்த்த குரு பகவான் பெயர்ச்சி இந்த தமிழ்ப் புத்தாண்டில் நிகழ்கிறது அதனை பற்றி இந்த கட்டுரையில் அறிந்து கொள்வோம்.

என்னதான் கோச்சார பலன்கள் ஒருபுறம் இருந்தாலும் வலுப் பெற்ற சுப கிரகங்கள் தசா நடக்கும் போது பெரிய பாதிப்புகள் ஏற்படாது தசாவின் சுபத்தன்மை ஜாதகரை காப்பாற்றி விடும்.



புயல் வருகையில் குடிசை வாசிகளுக்கும் நல்ல கான்கிரீட் கட்டுமானத்தில் வாழ்பவருக்குமான பாதிப்புகளில் வித்தியாசம் இருக்குமே அது போலத்தான்.

வருகிற விசுவாவசு வருடம் சித்திரை மாதம் 28ம் தேதி ஞாயிற்றுக்கிழமை பகல் மணி 1–24க்கு குரு பகவான் ரிஷபத்தில் இருந்து மிதுனத்திற்கு பெயர்ச்சி ஆகிறார்.

இனி இந்த குருப்பெயர்ச்சி பலன்கள் பன்னிரு ராசி களுக்கும் என்ன யோக பலன்களை கொடுக்கும் என்பதை பார்ப்போம்

## மேஷம்



குரு பகவான் காலப்புருஷ தத்துவத்தின் முதல் வீடான மேஷத்திற்கு தைரிய வீரிய ஸ்தானமான மூன்றாம் வீட்டிற்கு வருகிறார். திருமண கனவில் இருப்பவர்களுக்கு நல்ல செய்திகள் வரும். அதற்கான முயற்சிகளில் உடனடியாக இறங்கி விடுங்கள்.

ஜாதகரே நேரிடையாக தேடுவதை தவிர்த்து தந்தையார் மூலம் செய்வது நன்மைகளை உண்டாக்கும். தந்தையார் சொல்லை கேட்பது மேஷ ராசி அன்பர்களுக்கு நல்லது.

சமூகத்தில் கௌரவம், அங்கிகாரம் கிடைக்கும், தேவையற்ற டென்ஷனை தவிர்த்து விடுங்கள் உடல் நலனில் அக்கறை கொள்ள வேண்டும்.

## ரிஷபம்



வருவாய்க்கு குறைவு இருக்காது, வீட்டில் நிம்மதி நிலவும். செலவுகள் அதிகரிக்கும், அலைச்சல் கூடுதலாக இருக்கும்.நேரத்திற்கு சாப்பிட முடியாமல் போகலாம் எனவே பயணத்தில் திட்டமிடுதல் வேண்டும்.

திருமணம் சார்ந்த விசயங்களை எதிர்ப்பார்த்து இருப்பவர் அதனை ஆரம்பித்து விடுங்கள். திருமணம் செய்ய உகந்த காலகட்டம் இது. வேலை தேடுபவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். குழந்தை பேறு எதிர்ப்பார்த்து இருப்பவர்களுக்கு இன்னமும் கொஞ்சம் தாமதம் ஆகும் பொறுமையுடன் சகித்துக் கொள்ள வேண்டும். முதல் திருமணம் முறிந்தவர்கள் இரண்டாவது திருமணத்திற்கு வரன் பார்க்கலாம் நினைத்த இடத்தில் முடியும்.

## மிதுனம்



உங்கள் பேச்சு பிரச்சினைகள் வருவதற்கு வாய்ப்பு இருப்பதால் கவனமாக இருங்கள். உடல் நலனில் அக்கறை கவனம் தேவை,, மனதை புத்துணர்ச்சியுடன் வைத்திருக்க பழகிக் கொள்ளுங்கள்

திருமணம் கைகூடும், குழந்தை பாக்கியம் கிட்டும். வருவாய் பொறுத்தவரையில் கையிருப்பை எண்ணி செலவு செய்ய வேண்டும் சிக்கனத்தை கடைபிடியுங்கள்.

போட்டித் தேர்வு, அரசு பணிக்கு முயற்சி செய்பவர்களுக்கு காரியம் நிறைவேறும்.

## கடகம்



கடன் பிரச்சினை குறையும், எந்த காரியத்தையும் அதிக முயற்சிகள் மூலமாகவே முடிக்க முடியும். அரசியலில் பயணிப்பவர்களுக்கு தொந்தரவுகள் வரும். பத்திரிகையாளரிடம் கவனமாக இருக்க வேண்டும்.

கணினி துறையில் இருப்வர்கள் உடல் நலனில் அக்கறை செலுத்த வேண்டும். அன்றாடம் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள் மனம் புத்துணர்ச்சி அடையும்.

## சிம்மம்



குடும்பத்தில் சிறு சிறு சலசலப்புகள் வந்து போகும். தாயார், அத்தைகள் மற்றும் இளைய சகோதரிகள், மூலம் செலவுகள் அதிகரிக்கும்.

இதுவரையில் பேச்சு மூலம் லாபம் பார்த்த ஜாதகர்களுக்கு இனி கொஞ்சம் மந்த நிலை தெரியும். குடும்பத்தை தலைமை ஏற்கும் நிலை வந்து விடும்.

குழந்தை பாக்கியம் எதிர்பார்த்து காத்திருப்பவர்களுக்கு குழந்தை பேறு உண்டாகும். ஆன்மீக ஈடுபாடு நன்மை பயக்கும்.

## கன்னி



எதிரிகள் பலமிழந்து போவார்கள், அரசியலில் திடீர் அதிர்ஷ்டம் உண்டாகும்.

டேபிள் வொர்க் கில் இருப்பவர்களுக்கு அதாவது வழக்கறிஞர், மருத்துவர்கள், நிதி ஆலோசகர்கள், ஜோதிடர்கள், கணினி மற்றும் தகவல் தொழில்நுட்ப துறைகளில் பயணிப்பவர்களுக்கு தொழில் நன்றாக இருக்கும்.

மாணவர்களுக்கு போட்டி தேர்வுகள் எளிதாக இருக்கும். கடன் வாங்குவதை இந்தாண்டு தவிருங்கள்!

## துலாம்



உடல் நிலை நன்றாகும்! சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள், முயற்சிகள் பயன் அளிக்கும். பூர்விக சொத்துக்கள் சம்மந்தப்பட்ட விசயங்கள் சரியாகிவிடும்.

நிறைய கடன்கள் கிடைக்கும் எனவே கவனமும் திட்டமிடலும் இருப்பது நல்லது. தர்ம காரியங்கள் செய்ய நினைப்பவர்கள் அதில் மனமுவந்து ஈடுபடுங்கள்.

கோயில் நிர்வாகம், ஆன்மீக பயணங்கள் போய் வருவதற்கான நல்ல சூழல் இந்தாண்டு ஏற்பட்டுள்ளது. எனவே துலாம் ராசிகாரர்கள் இதனை பயன்படுத்தி கொள்ளலாம். ஆராய்ச்சி கல்வி யில் பயில விரும்பும் மாணவர்கள் உடனடியாக அதற்கு விண்ணப்பித்து விடுங்கள் நல்ல பலன்கள் உண்டு.

## விருச்சிகம்



அரசியல் துறையில் இருப்பவர்களுக்கு திடீர் ஆதாயம் கிடைக்கும். புதிதாக வாகனங்கள் வாங்குவதை இந்த ஆண்டு தவிர்க்கலாம். வாகனங்களில் செல்லும்போது கவனம் தேவை.

சளி தொந்தரவுகள், வயிற்று பிரச்சினைகள் வர வாய்ப்புள்ளது எனவே உணவில் கவனம் செலுத்துங்கள்.

வெளிநாட்டு வேலைக்கு ஆசைப்படுபவர்கள் அதற்கான முயற்சிகளை செய்யலாம். நல்ல அனுகூலம் உண்டாகும்.

## தனுசு



இந்த ராசியினருக்கு இந்தாண்டு காதல், திருமணங்கள் கைகூடும்.இவர்களுக்கு உறவினர் வகையில் அல்லது காதல் திருமணங்கள்  தான் அதிகமாக நடக்கும்.

நினைத்த இடத்தில் உதவிகள் கிடைத்து விடும். வீடு வாகனங்கள் வாங்குவதாக இருப்பின் பழைய வீடுகளையோ அது போல உபயோகித்த வாகனங்களையோ வாங்குவது நல்லது.

குழந்தை பிறப்பு விசயமாக மருத்துவ செலவுகள் செய்ய வேண்டியது இருக்கும். தந்தையாரை கவனித்து கொள்ளுங்கள். தாயார் மூலம் லாபம் ஏற்படும். பட்டபடிப்பு மேற்கொள்ளும் மாணவர்களுக்கு தேர்வில் வெற்றி உண்டாகும்.

வயிற்று எரிச்சல்,  போன்ற உபாதைகள் வர வாய்ப்புள்ளதால் உணவில் கவனம் செலுத்த வேண்டும்.

## மகரம்



ஏழரைச்சனியின் தாக்கம் இன்னமும் முழுமையாக விலகவில்லை என்றாலும் இதுவரையில் இருந்த கஷ்ட நிலை இனி இல்லை. பெற்றோர்களுக்கு பிள்ளைகள் மூலமாக உதவி கிடைக்கும். தம் பிள்ளைகளுக்கு திருமணத்தை செய்ய விரும்பும் பெற்றோர்களுக்கு நல்ல வாய்ப்பு எனவே உங்கள் (மகன்) மகள் களுக்கு வாழ்க்கை துணையினை தேடலாம்.  எதிலும் நிதானமாக செயல்பட வேண்டும்.

வேலை பார்க்கும் இடத்தில் மேலதிகாரிகள் குடைச்சல் அதிகமாக இருக்கும். புதிய வேலை வீடு இடமாற்றம் இவற்றிற்கு உகந்த நேரம் இதுவாகும்.

## கும்பம்



நண்பர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். போட்டிகளில் வெற்றி ஏற்படும். தாய் தந்தையார் சொத்துகளில் ஆதாயம் உண்டு.

சமூகத்தில் அந்தஸ்து உயரும். குரு பார்வை இந்தாண்டு கும்ப ராசியில் விழுவதால் ஜென்ம சனி பெரியளவில் பாதிப்புகள் கொடுக்காது.

மனைவி தொழிலுக்கு உதவியாக செயல்படுவார்

## மீனம்



பண வரவு விசயத்தில் ஏற்ற இறக்கங்கள் இருக்கும். வேலை தொழில் செய்து வருபவர்களுக்கு மாற்றம் உண்டாகும். வீட்டை மாற்றியமைக்க விரும்புகிறவர்களுக்கு அனுகூலம் உண்டாகும். எதிரிகள் தொந்தரவு இருக்காது. கல்யாண ஆசையில் காத்து இருப்பவர்களுக்கு திடீர் திருமணம் நடக்க வாய்ப்பு உள்ளது.

ஜென்ம குரு மற்றும் குரு பகவான் ராசிக்கு 3,4,6,8,12 ல் நிற்கும் ஜாதகர்களும் அனைத்து ராசி அன்பர்களும் குரு பகவானின் பரிபூரண ஆசிகளை பெறுவதற்கு கீழ்க்கண்ட குரு ஸ்தோத்திரம் படிக்க வேண்டும்.

"குணமிகு வியாழக் குரு பகவானே
மணமுடன் வாழ்வு மகிழ்வுடன் அருள்வாய்
பிரகஸ்பதி வியாழப் பரகுரு நேசா
கிரக தோஷமின்றிக் கடாட்சித் தருள்வாய்

என குருவினை போற்றி அவரை வழிபட்டு வந்தால் குரு தோஷம் நீங்கி நன்மை உண்டாகும்.

குரு பகவானுக்கு முல்லை மலரை சாற்றி, கொண்டை கடலையை படையலிட்டு வணங்கி வருதல் வேண்டும்.

குரு பகவான் ஸ்தலங்கள் திருச்செந்தூர், கண்ணனூர் பால சுப்ரமண்யர் திருக்கோயில் (திருமயம் வட்டம்), ஆலங்குடி (தஞ்சாவூர் மாவட்டம்) ஆகியன, இவை தவிர சிவ ஆலயங்களில் காணப்படும் தட்சணாமூர்த்தி யை யும் வழிபட்டு வருவது சிறந்த பரிகாரம் ஆகும்.

இது வரையில் வரும் தமிழ் புத்தாண்டு சித்திரை மாதம் வரப்போகும் குரு பகவான் பெயர்ச்சி பலன்கள் பற்றி பார்த்தோம்

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கலாம்.

இராமநாதபுரத்தில் வசிக்கும் ஜோதிடர் எல்லி சட்டம் பயின்றவர். ஜோதிடம், தத்துவம் மற்றும் வரலாறு ஆகியவற்றில் நிபுணத்துவம் கொண்ட இவர் ஜோதிடம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை இணையத்தில் தொடர்ந்து எழுதும் டிஜிட்டல் ஜோதிட விற்பன்னர். தொடர்புக்கு : 9944865943



நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

நகரத்தார்களின் வாசிப்பின் ஓர் அங்கமாக
வணிகம், இலக்கியம், ஆன்மீகம், பண்பாடு, வாழ்வியல்
மற்றும் நிகழ்வுகள் ஆகிய தகவல்களை தாங்கி
தேர்ந்தெடுக்கப்பட்ட வாசிப்புகளின்
பெட்டகமாக ஓர் மின்னிதழ்.

மாதந்தோறும் இலவசமாக இணையவழி மற்றும்
உங்கள் கைபேசி வாயிலாக...

நாம் நகரத்தார் மின்னிதழை செலவின்றி உங்கள்
மொபைலில் வாசிக்க, உங்கள் விருப்பத்தை கீழ் உள்ள
எண்ணுக்கு வாட்ஸாப் மூலம் தெரியப்படுத்துங்கள்,

**97917 76534**

www.naamnagarathar.com